விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை (25.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 342







## கிளிநொச்சியை நோக்கி தாக்குதல் ஆரம்பம்

# முன்னேறும் படையை எதிர்த்து புலிகள் உக்கிர தாக்குதல்

## 27 படையினர் பலி; பலரைக் காணவில்லை

(கொழும்பு)

கிளிநொச்சியினை நோக்கி மூன்று முனைகளில் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று உக்கிர மோதல் வெடித்துள்ளது.

இந்த மோதலில் படையினர் பலர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 27 படையினர் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அடம்பன், புதுமுறிப்புக்குளம், திருமுறிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்தே படையினர் கிளிநொச்சியை நோக்கிய முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இம் மோதல்களில் இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் கொட்டும் மழை தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகின்றது.

இடையிடையே கடும் காற்றுடன் பெய்யும் மழையினால் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

சில குளங்கள் நிரம்பி காணப்படுகின்றன. இம் மழை மேலும் சில நாட்களுக்குப் பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைக் கலைக்க நாள் குறிக்கும் ஜனாதிபதி

### டிசம்பர் 9இல் சாத்தியமா?

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலினை நடத்துவதற்கு சோதிடர்களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்ல நாள் கேட்டிருக்கின்றார் என்று தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதான எதிர்க் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 66 லொறிகளில் உணவு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக 66 லொறிகளில் அத்தியாவசியப் பொருட்கள் நேற்றுப் பிற்பகல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர்களின் விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன

### தமிழகத்தில் இன்று அவசர மாநாடு

(சென்னை)

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முன் வந்தும் கூட போர் நிறுத்தக் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்து விட்டதையடுத்து இந்த விடயத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க இன்று சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை முதல்வர் கருணாநிதி கூட்டியுள்ளார்.

நேற்று அவசரமாகக் கூட்டப்பட்ட செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய கருணாநிதி இன்று காலை கோட்டையில் உள்ள தனது அறையில் இந்தக் கூட்டம் நடக்குமென்றும் இதில் பங்கேற்குமாறு சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளேன்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸுடன் பேசிவிட்டுதான் இந்தக் கூட்டத்தை கூட்டுகிறேன். இலங்கையில் தமிழர்களைப் பாதுகாக்கவும், (12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மணி நேரம் இன்று மின் வெட்டு

(யாழ்ப்பாணம்)

திருத்த வேலை காரணமாக இன்று காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரையும் மின்சாரம் தடைப்படும் என மின்சாரசபை . (12ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...
குரு பெயர்ச்சி
உங்களுக்கு எப்படி?
இடம்


## தெல்.வைத்தியசாலை மற்றும் கல்லூரிகளை சொந்த இடத்தில் இயங்க வைக்க உத்தரவு

### 133 குடும்பங்களும் குடியமர்த்தப்படுவர்

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை யூனியன் மற்றும் மகாஜனக் கல்லூரிகளை மீண்டும் பழைய இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா உள்ளிட்ட வலிகாமம் வடக்கைச் சேர்ந்த விவசாயிகள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பிரதம நீதியரசர் தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு இவ் உத்தரவினை வழங்கியது.

உயர் நீதிமன்றத்தினால் வலிகாமம் வடக்கு அதியுயர் (12ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை நேற்றுக் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

பாணின் விலை நேற்று முதல் 45 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. மாவின் விலை குறைக்கப்பட்டதையடுத்து இவ் விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச)

## விஞ்ஞான பீடாதிபதியாக பேரா.குமாரவடிவேல் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதியாக பேராசிரியர் இ.குமாரவடிவேல் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் இ.குமாரவடிவேல் நான்காவது தடவையாக விஞ்ஞான பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகபதில் துணைவேந்தராகவும் இவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தூர இடங்களுக்குச் சென்று மீன் பிடிக்க இராணுவம் அனுமதியளிக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி., யாழ்.இராணுவத் தளபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மீனவர்கள் தூர இடங்களுக்குச் சென்று நீண்ட நேரம் மீன் பிடிக்க முழுமையாக அனுமதிக்குமாறு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஏ. உதயன், யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.எ.சந்திரசிறியிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

படையினரின் கடும் முயற்சியின் பின்னர் பூநகரிப் பிரதேசம் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது என்ற செய்திகள் எமது காதுகளுக்கு எட்டிய போது, இந்த நாட்டில் வாழும் பிரஜைகள் எல்லோரிலும் பார்க்க மிகவும் சந்தோஷமடைந்தவர்கள் எமது குடாநாட்டு மக்கள் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏனெனில், தென்னிலங்கைக்கு தரை வழியால் சென்று வரும் பாக்கியம் எம் மக்களுக்குக் கிடைத்ததால் அவர்கள் மிகவும் சந்தோஷமடைந்தனர். பூநகரி தரைப் பாதையால் குடாநாட்டு மக்கள் பயணிக்கக் கூடிய வழி பிறந்துள்ளது. அதற்காக பல இராணுவ வீரர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். பல இராணுவ வீரர்கள் காயமடைந்து அங்கவீனர்களாகியும் இருக்கலாம். அவர்களுக்கு நாம் மரியாதை செலுத்துகின்றோம்.

பூநகரி (கேரதீவு - சங்குப்பிட்டி) பாதை மீட்கப்பட்டுள்ளதால் யாழ்.குடாநாட்டிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் பயனடைய இருக்கிறார்கள். குறிப்பாக குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், கடல் உணவுப் பொருட்கள் மற்றும் பழ வகைகளைத் தரைப்பாதை ஊடாகச் சென்று சந்தைப்படுத்துவதன் மூலம் குடாநாட்டில் பொருளாதார வளர்ச்சி, தொழில் வாய்ப்புக்கள் ஏற்படும். அதேபோல குடாநாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் தட்டுப்பாடு இன்றிக் கிடைக்க இந்தப் பாதை வழி வகுக்கும். அவசர நோயாளர்கள் மருத்துவ உதவி தேவைப்படுவோர், அவசர தேவை காரணமாக கொழும்புக்குச் செல்பவர்கள் துரித கதியில் தமது பயணத்தை தரைப்பாதை ஊடாக மேற்கொள்ளலாம்.

இது வரை காலமும் ஏ-9 பாதை மூடப்பட்டிருந்ததால் வருமானம் குறைந்த மக்கள் விமானம் மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ பெரும் பணம் கொடுத்து கொழும்பு செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இனிமேல் குறைந்த செலவில் தரைப் பாதையால் செல்லக்கூடிய வழி இவர்களுக்கு கிடைத்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை காலமும் யாழ்.குடாக்கடலில் குறிப்பாக நாவாந்துறை, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை கடல்தொழிலாளர்கள் குறிப்பிட்ட தூரம் வரை சென்றுதான் மீன் பிடிக்க படையினரின் அனுமதி கிடைத்தது. இப்போது பாரிய கடல் பிரதேசமும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதனால் இந்தப் பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது. கடற்தொழிலையே நம்பி வாழும் ஏழை கடற்தொழிலாளர்களின் எதிர்காலம் சிறக்க உள்ளது.

ஆகவே கடற்றொழில் செய்து தமது சீவியத்தை நடாத்தும் நாவாந்துறை, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மற்றும் தீவக கடல்தொழிலாளர்கள் தூர இடங்களுக்குச் சென்று நீண்ட நேரம் மீன் பிடிக்க முழுமையாக அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (எ)

# இந்திய அரசின் நிவாரணப் பொருட்கள் வெள்ளியன்று வன்னிக்கு அனுப்பிவைப்பு

இந்தியாவின் நிவாரணப் பொருள்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வன்னி மக்களுக்கு அரசாங்கம் விநியோகிக்கும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு இந்தியா அனுப்பி வைத்திருக்கும் 1760 மெற்றிக் தொன் நிவாரணப் பொருள்களும் பாதுகாப்புத் தரப்பினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கு எடுத்துச் செல்லப்படும் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதில் நாங்கள் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளோம். 1760 மெற்றிக்தொன் நிவாரணப் பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு 160 லொறிகள் தேவை. அவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பொருள்களை கிளிநொச்சி மற்றும் விஸ்வமடு அல்லது புதுக்குடியிருப்பில் களஞ்சியப்படுத்த வேண்டும். இவை இலகுவானவையல்ல.

நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை எடுத்துக் கொண்டால் அரசாங்க முகவர்களைத் தவிர, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட எந்தவொரு அமைப்பிடமும் போதியளவு களஞ்சிய வசதிகள் இல்லை. அவ்வாறு நிவாரணப் பொருள்களை அவர்கள் களஞ்சியப்படுத்த வேண்டுமாயின் அரசாங்கத்திடமே அவர்கள் களஞ்சியங்களைக் குத்தகைக்கு எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 66 லொறிகளைக் கொண்ட முதலாவது வாகனத் தொகுதி இன்று திங்கட்கிழமை கிளிநொச்சிக்குச் செல்வதாகவும், அடுத்த கட்ட வாகனத் தொகுதி எதிர்வரும் புதன்கிழமை அங்கு செல்லவிருப்பதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நேற்றுக் கூறினார்.

வன்னியில் இடம்பெயர்ந்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரசாங்க அதிபர்கள் ஊடாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அவற்றிற்கு ஊடாகவே நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், உலக உணவுத் திட்டமும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு தனியானதொரு அட்டைத் திட்டமொன்றைக் கடைப்பிடிப்பதாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக நிவாரணங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவாரட்ண மேலும் தெரிவித்தார். (ச-5)

# ஜே.ஆர்.பாணியில் கருத்துக் கணிப்பு?

## தயாராகிறது அரசாங்கம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலொன்றை நடத்தாமல், நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் 6 வருடங்களுக்கு நீடிப்பதற்கான கருத்துக் கணிப்பொன்றை நடாத்துவது பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலானஅரசாங்கம் 1983 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை நடத்தாமல் கருத்துக்கணிப்பை நடத்தி 1989 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை அதிகரித்திருந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பாணியில் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் கருத்துக் கணிப்பொன்றை நடத்தி 2004 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிப்பது பற்றி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் கருத்துக் கணிப்பொன்றுக்குச் செல்வதற்கு முன்னர் கலைக்கப்படாமலிருக்கும் 5 மாகாண சபைகளைக் கலைத்து அவற்றுக்கான தேர்தலை நடத்தி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியிலிருக்கும் ஆதரவை அறிந்து கொள்வது பற்றியும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது. இதன் மூலம் அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை அளவிட்டுக் கொள்ளலாம் என ஆளும் கட்சியின் சில தலைவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. அதன் பின்னர் தேசிய கருத்துக் கணிப்பொன்றை நடத்துவது சிறந்தது என அவர்கள் கூறியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை விழிப்புறச் செய்துள்ளது. அரசாங்கத்தின் முன்னேற்பாடுகளைத் தொடர்ந்தே பொதுத் தேர்தலொன்றுக்கு அனைவரும் தயாராக இருக்கவேண்டுமென கடந்த வாரம் சிறிகொத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். அதே நேரம், ஏனைய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணியொன்றை அமைப்பதில் முனைப்புக்காட்டி வரும் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்த பல போராட்டங்கள் பிசுபிசுத்துப் போயுள்ள நிலையில் அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கான புதிய வழிமுறைகள் பற்றியும் அந்தக் கட்சி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. எரிபொருள் விலையேற்றத்துக்கான மோட்டார் வாகன ஒலி எழுப்பல் போராட்டம் விலைவாசி அதிகரிப்புக்கு எதிரான போராட்டம், மாற்று வரவுசெலவுத்திட்டம் போன்றவை போதியளவ மக்கள் கவனத்தை ஈர்க்கவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் கருத்துக் கணிப்பொன்றை அரசாங்கம் நடத்துமாயின் அரசாங்கத்துக்கு மாத்திரமன்றி அது எதிர்க்கட்சிக்குப் பாரிய சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-5)

## வன்னியிலிருந்து 299 பேர் வவுனியா சென்றனர்

நாளுக்கு நாள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் பொதுமக்களின் எண் ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. நேற்று முன்தினம் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக 130 பேர் வந்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறும்போது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரண்டு குழுக்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியை வந்தடைந்ததாகவும், முதலாவது குழுவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆண்களும், 28 பெண்களும் உள்ளடங்குவதாகத் தெரிவித்திருக்கும் அவர், இரண்டாவது குழுவில் 6 ஆண்களும், 4 பெண்களும் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்ததாகவும் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இது வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த 299 பேர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தடைந்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறி, யாழ்ப்பாணம், மணலாறு மற்றும் மன்னார் பகுதிகளில் 935 பேர் தஞ்சமடைந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## இன்று ஒரு தகவல்

# வேலை பிடிச்சிருக்கா?

ஒருவர் நல்ல உத்தியோகத்தில் தான் இருந்தார். ஆனால் எப்பொழுது பார்த்தாலும் முகத்தை வெறுப்பாக வைத்துக் கொண்டிருப்பார்.

"ஏன் சேர் இப்படி இருக்கிறீங்க?" என்று விசாரித்தேன்.

"ஏன்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று இருக்கு..." என்றார்.

"உங்களுடைய வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை!" என்றார்.

இப்படிப்பட்டவர்களால் வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியாது என்பது நிபுணர்களின் கருத்து.

வேலையை நேசிக்கத் தெரிந்தவர்கள் வெற்றி பெறுவார்கள் என்கிறார்கள் அவர்கள்.

எந்தத்துறையாக இருந்தாலும் சரி... அந்தத் துறையில் வெற்றிகரமாக இருப்பவர்களை விசாரித்துப் பாருங்கள். அவர்கள் "எனக்கு என்னுடைய வேலை மிகவும் பிடிக்கும்!" என்று சொல்பவர்களாகத்தான் இருப்பார்களாம்.

"ஒருவனுக்கு பிடித்தமான பொழுது போக்கே அவனுடைய தொழிலாக இருந்துவிட்டால் அவனை மாதிரி கொடுத்து வைத்தவன் வேறு யாரும் இல்லை" என்கிறார் பெர்னாட்ஷா.

ஒரு தடவை மன்னர் ஹுமாயுன் உயிரை தண்ணீர் பந்தல் வைத்திருக்கும் தொழிலாளி ஒருவர் காப்பாற்றினாராம்.

உடனே மன்னர், "உனக்கு என்ன பதவி வேணுமானாலும் கேள்... தருகிறேன்... உயர் பதவி வேண்டுமா?" என்று கேட்டாராம்.

"மன்னா! மக்களின் தாகம் தீர்க்கக்கூடிய இந்தப் பணியை விட உயர்ந்தது உண்டா?" என்றாராம் அந்தத் தொழிலாளி.

அவரால் அவருடைய வேலையை நேசிக்க முடிந்தது அதனால் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது.

நாமெல்லாம் அப்படி இல்லை. வேலை கிடைக்கும் வரைக்கும் கிடைத்தால் போதும் என்று இருக்கும். கிடைத்தபின் ஏன்டா இந்த வேலைக்கு வந்தோம் என்று அலுத்துக் கொள்வோம்.

சரி... நாம் இருக்கும் இடத்தில் நாம் வெற்றிகரமாக இருக்க வழி உண்டா? உண்டு.

முக்கியமாக ஆறுவழிகள் சொல்கிறார்கள் மனவியல் நிபுணர்கள்.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை செய்பவரா? அப்படியானால் இதைக் கேளுங்கள்.

உங்கள் மேலதிகாரியின் எதிர்பார்ப்புக்குத் தகுந்த மாதிரி உங்களது வேலை இருக்கிறதா? அப்படி இல்லையானால் முதலில் உங்கள் வேலையின் தரம் உயர வேண்டும்.

உங்களுக்கு மேலே, கீழே வேலை பார்க்கும் பணியாளர்களிடம் நல்ல விதமாக பழுகுகிறீர்களா? அந்த உறவு முறையில் ஏதாவது குறையிருந்தால் அதைக் கண்டு பிடித்து திருத்திக் கொள்ளுங்கள்.

நம்பிக்கைக்கு உரியவர் – என்று நீங்கள் பெயரெடுக்க வேண்டும். நீங்கள் எடுக்கும் முடிவு நல்ல முடிவாகத்தான் இருக்கும் – என்று மற்றவர்கள் சொல்ல வேண்டும்.

உங்கள் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். இது, மனம், உடல் இரண்டும் சம்பந்தப்பட்டது. அதனால் மனத்தையும் உடம்பையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் செயல்படும் விதத்தை நன்றாக புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடைய நிர்வாகம் ஒரு காரியம் செய்தால் ஏன்? எதற்காக அப்படி செய்கிறது... அதனுடைய குறிக்கோள் என்ன... அது நீடிப்பதற்கு காரணம் என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிரிப்புக்கு வஞ்சகம் பண்ணாதீர்கள். நன்றாக சிரிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது திரும்பக் கிடைக்கும்.

கடந்தகால தோல்வியைப் பற்றி கவலைப்படாதீர்கள். மேலதிகாரியின் விருப்பத்தை தெரிந்து கொண்டு நடப்பது நல்லதுதான். அதற்காக "காக்கா" பிடிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

உங்களுக்கு ஒரு பொறுப்பான வேலை கிடைக்கிறது. உடனே சத்தம் – குழப்பம் என்று சூழ்நிலையை இறுக்கமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. எந்தச் சூழலையும் இயல்பாக கையாளக் கூடியவர் என்பதை காட்ட வேண்டும்.

இவையெல்லாம்... உங்கள் துறையில் நீங்கள் வெற்றி பெற நிபுணர்கள் சொல்லும் யோசனைகள்!

இவ்வளவு விபரமும் சொல்லிவிட்டு ஒருவரைப்பார்த்து கேட்டேன். "இப்பொழுது நீங்கள் செய்யும் வேலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்றேன்.

"ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்றார்.

"சரி... என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சும்மாதான் இருக்கிறேன்!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை டிசம்பர் 3ஆம் வாரத்தில் வெளியிட எதிர்பார்ப்பு

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரம் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், டிசம்பர் மாதம் மூன்றாம் வாரமளவில் உயர்தர பரீட்சை முடிவுகளை வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மும்மொழிகளிலுமான உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் முடிவடைந்ததையடுத்து முடிவுகள் தொடர்பான விபரங்கள், மாவட்ட வெட்டுப் புள்ளி, இசட் புள்ளி உள்ளிட்ட தரவுகளை கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகளை பரீட்சைகள் திணைக்களம் தற்போது ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்தின் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாடு பூராகவும் ஆயிரத்து 818 பரீட்சை நிலையங்களில் ஆகஸ்ட் 6ஆம் திகதி முதல் இடம்பெற்றது.

இருந்தபோதும் தமது சம்பள பிரச்சினைகள் தொடர்பாக ஆசிரியர்கள் கோரிக்கைகளை முன்வைத்ததினால் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தாமதம் அடைந்தன.

திட்டமிட்டப்படி குறித்த காலத்தில் மதிப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் பரீட்சை முடிவுகளை காலதாமதமின்றி வெளியிடுவதற்கு முடிந்திருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (5)

# தெல்லிப்பளையில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று

யாழ். விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பளை விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அளவெட்டி மத்தி மகாஜன சபை மண்டபத்தில் தெல்லிப்பளை விவசாயப் போதனாசிரியர் செல்வி. பொ. மாதுமை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் எஸ். முரளீதரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார், தெல்லிப்பளை கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ். ஜெயதாட்சாயணியும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர் திருமதி. சா. குகணேசன், தெல்லிப்பளை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் றுவான் இன சோள விதையும், திஸ்ஸ இன நிலக்கடலை விதையும், ரவி இன குரக்கன் விதையும், தொழில் நுட்ப தகவல் அடங்கிய துண்டுப்பிரசுரங்களும் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகளின் பெயர் விபரம் வருமாறு,

⌖ **சிறந்த நெல் உற்பத்தியாளர்**

இ. துரைசிங்கம் (மல்லாகம்), ம. பத்மநாதன் (அளவெட்டி மத்தி), ந. கணேசமூர்த்தி (அளவெ ட்டி மத்தி.

⌖ **சிறந்த சேதனப் பண்ணையாளர்**

த. சிவநேசன் (அளவெட்டி மேற்கு), மு. ஆறுமுகம் (துர்க்காபுரம்,தெல்லிப்பளை), க. வேலாயுதம் (தெல்லிப்பளை, கிழக்கு).

⌖ **சிறந்த சுயவிதை நெல் உற்பத்தியாளர்**

க. கதிரன் (மல்லாகம் வடக்கு), க. கணேசமூர்த்தி (நீலியம்பனை, மல்லாகம்), நா. லோகநாதன் (மல்லாகம்).

⌖ **சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்**

அ. இராசேந்திரம் (சிறுவிளான், இளவாலை), சி. விஜயரத்தினம் (அளவெட்டி வடக்கு), சி. விக்னேஸ்வரன் (அளவெட்டி மத்தி.

⌖ **சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி**

து. மகேஸ்வரி (கூட்டுவன் தெற்கு), ம. தேவசுரேகா (கட்டுவன் மேற்கு), வி. திலகவதி (அளவெட்டி தெற்கு).

⌖ **சிறந்த சோளச் செய்கையாளர்**

க. விஜயகுமார் (அளவெட்டி வடக்கு), செ. ஈஸ்வரன் (அளவெட்டி மேற்கு), இ. வாமதேவன் (கட்டுவன் மேற்கு).

⌖ **சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்.**

செ. லோகநாதன் (அளவெட்டி மத்தி), நா. முருகையா (அளவெட்டி வடக்கு), க. சற்குணேஸ்வரன் (அளவெட்டி மேற்கு).

⌖ **சிறந்த குரக்கன் செய்கையாளர்**

இ. அண்ணாமலை (தெல்லிப்பளை கிழக்கு), சி. சிவஞான சம்பந்தர் (பண்ணாலை), ஆ. பாலசுப்பிரமணியம் (தெல்லிப்பளை).

(5-2)

## இராசி பலன்

*25.11.2008*
*(கார்த்திகை 10, செவ்வாய்க்கிழமை)*
*திரயோதசி முன்னிரவு 7.32 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.18 மணிவரை*
*இராகுகாலம் 3.12 - 4.42 மணிவரை*
*சுபநேரம் 10.42 - 12.12 மணிவரை*
*பிரதோஷ விரதம்*

| | |
|---|---|
| மேடம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, போசன சுகம், எடுத்த காரியம் கைகூடும். |
| இடபம் | பணவருவாய், திடீர் பயணம், சுகவாழ்வு, காரிய அனுகூலம். |
| மிதுனம் | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய இடையூறு, சொத்துப் பிணக்கு. |
| கடகம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம். |
| சிங்கம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |
| கன்னி | மதிப்புக் குறைவு, பொருள் விரயம், முயற்சி தாமதம், மனச் சோர்வு. |
| துலாம் | பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படல், பிரயாணம், சுபசெலவு. |
| தனுசு | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மகரம் | சுபநிகழ்வு, நல்ல செய்தி, கடின உழைப்பு, பிறர் உதவி. |
| கும்பம் | ஆன்றோர் மகிழ்வு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு. |
| மீனம் | எதிர்பாராத அச்சம், காரிய இடையூறு, வீண் தொல்லை, பண விரயம். |

வளவன்


## பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவை

காலங்கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (5)


## சர்வதேச HIV / AIDS தினம் - 2008 டிசெம்பர் 01

HIV / AIDS ஒரு பாலியல் தொற்று நோயாகும். இது பெரும்பாலும் நம்பிக்கைக்குரிய வாழ்க்கைத் துணையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத பாலியல் தொடர்புகள் காரணமாக ஒருவருக்குத் தொற்றுகிறது. இது தவிர பரிசோதிக்கப்படாத இரத்த மாற்றீடு, தொற்று நீக்கப்படாத ஊசிகள் மற்றும் தோலைக் கிழிக்கும் மருத்துவ உபகரணங்கள், தொற்றுள்ளவருக்கு பயன்படுத்திய சவர அலகினை இன்னொருவருக்கு பாவிப்பதாலும் HIV தொற்றலாம்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.




23.11.2008 அன்று திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெற்ற சாயி பாபாவின் 83ஆவது அவதாரதின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் கிசோத்)

## பலவருடங்களாக திருத்தப்படாத அனலைதீவு பிரதான வீதிகள்
## மக்கள் விசனம்

(அனலைதீவு)

அனலைதீவு பிரதான வீதிகள் நீண்ட காலமாக திருத்தப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற் குட்பட்ட மேற்படி வீதிகள் பல வருடங்கள் திருத்தப்படாமையால் முற்றாக சேதமடைந் துள்ளது.

வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் ஒன்று அங்கு சேவையை வழங்கி வருகின்ற போதிலும் வீதிகள் சேதமடைந்து ள்ளதால் சீராக சேவையை வழங்க முடியா துள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வீதியை விரைவில் திருத்தித்தருமாறு அனலைதீவு பொது அமைப்புக்கள் உரிய அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மருந்தாளர்கள் ஆட்சேர்ப்பு; நாளை மறுதினம் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மருந்தாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக பணிப்பாளர் வைத்திய கலாநிதி வி. ஞானசோதி அறிவித்துள்ளார்.

இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விபரம் வருமாறு :

எஸ்.ஜெயச்சந்திரன் (கொக்குவில்), எம்.மயூரா (கே.கே.எஸ்.வீதி), எஸ். குணசாந்தன் (கொடிகாமம்), என். கல்யாணி (சுழிபுரம்), ஆர். சிவகுமார் (சண்டிலிப்பாய்), கே. சிந்துஜா (சுன்னாகம்), ஆர். ஜெனார்த்தனி (யாழ்ப்பாணம்), எஸ். யாழினி (மானிப்பாய்), கே. சியாமினி (நீர்வேலி), கே.ஜனகன் (கொடிகாமம்), ஜே.ரதினி (கொக்குவில்), பி. என். சர்மிலா (அச்சுவேலி) (5-6)

## அபிவிருத்தித்திட்ட வேலைகளை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யவும்
### பரு. பிரதேச செயலாளர் அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித்திட்டங்களை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.




யாழ்.செய்திகள்

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிமூலம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் வீழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் 41 அபிவிருத்தித்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் அபிவிருத்தித்திட்ட வேலைகளை இம் மாதம் 30ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்து அவ் வேலைகளுக்கான நிதியை பெற்றுக்கொள்ளுமாறு வேலை செயற்பாட்டு முகவர்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5)

## கைதடியில் கால்நடை வைத்திய உப அலுவலகம்

(சாவகச்சேரி)

கைதடி பிரதேச கால்நடை வளர்ப் போரின் நலன் கருதி கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் தென்மராட்சி கால்நடை வைத்திய பணிமனையின் உப அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகத்தில் கால்நடைகளுக்கான செயற்கை முறை சினைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். என்றும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் இச்சேவையை கால்நடை வளர்ப்போர் பெற்றுக்கொள்ளலாம் என்றும் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் க. இரகுநாதன் தெரிவித்தார். (5-29)

## கல்வி செயற்பாட்டு பட்டறை இன்று

(சாவகச்சேரி)

சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலய சுற்றாடல் மற்றும் சமூகக்கல்வி பாட செயற்பாட்டு பட்டறை இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் இப் பயிற்சிப் பட்டறைக்கு மாணவர்கள் தமது பெற்றோருடன் பங்குபற்றி பயன்பெறுமாறு சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி. ஜே.தேவேஸ்வரன் கேட்டுள்ளார். (5-29)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் கடமையாற்றி அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஒக்டோபர் மாதத்திற் குரிய சம்பளம் வழங்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி தற்காலிகமாக கடமையாற்றும் ஆசிரியர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமது வேதனப்பட்டியலில் கையொப்பமிட்டு சம்பளத்தை வங்கியூடாக பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (5)

## நிறைகுறைந்த பாணை உற்பத்திசெய்த பேக்கரி உரிமையாளர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாணின் நிறையினை குறைத்து விற்பனை செய்த பேக்கரி உரிமையாளர்களுக்கு யாழ். நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 3 பேக்கரிகளில் யாழ். செயலக அளவீட்டு சேவைகள் திணைக்கள அதிகாரிகள் திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது 450 கிராம் பாண் உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்கு பதிலாக 415 கிராம் அளவில் பாண் உற்பத்தி செய்த 3 பேக்கரிகள் கண்டு பிடிக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆர். வசந்த சேனன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மேற்படி நிறை குறைந்த பாணை உற்பத்தி செய்த மூவருக்கும் பேக்கரி உரிமையாளர்கள் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து எதிர்வரும் காலத்தில் இத்தவறு ஏற்படக்கூடாது. எனவும் உத்தரவிட்டார். (5)

## மேலதிக பதிவாளர் அலுவலகம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில்
## முதலாம் திகதி முதல் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பிரதேச செயலகத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் அலுவலகம் ஆரம்பிக்கப் படுவதாக பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி பதிவுகள் வடமராட்சி காணி பதிவு அலுவலகத்தில் இடம்பெற்று வந்ததாகவும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மேலதிக பதிவாளர் அலுவலகமாக ஆரம்பிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளமுடியுமெனவும் பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் கூறினார்.

எனினும் காணிப்பதிவுகள் தொடர்ந்து வடமராட்சி காணிப்பதிவுகள் அலுவலகத்திலேயே இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (5)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும் என உதவி அரசாங்க அதிபர் க. சிறிமோகனன் அறிவித்துள்ளார்.


இக்கூட்டத்தில் தொடர்ந்து பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் கடற்தொழிலாளர் குழுக்கூட்டமும் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (5-134)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரிர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த மறுசீரமைப்பு பயிற்சிப் பட்டறை தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதை பிரதேச சபைச் செயலாளர் த. நடராஜா அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4 மணிவரை வலி.கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5-2)



யா/ பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் சிறுவர் பூங்காவை வைத்திய கலாநிதி திரு.திருமதி. முத்துவேலு தம்பதிகள் திறந்துவைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் திரு. இராமலிங்கம் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# நோத் முதல் கோபல்லவா வரை 162



## முதலாம் அரச சபை

இந்நிர்வாக சபைத் தலைவர்களை ஆள்பதி அங்கீகாரஞ்செய்து மந்திரிமார் சபையில் இருக்குமாறு சம்பிரதாய நியமனஞ் செய்தார். பின்னர் 10-7-31 இல்கூடிய சபையிலே ஆள்பதி தமது பிரசங்கத்தைச் செய்தார். அவர் பேசுமுன் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் செய்தியையும் குடியேற்ற மந்திரியாரின் செய்தியையும் முறையாகப் படித்தார். மன்னர் பிரானின் ஆசிச்செய்தியின் சுருக்கம் பின்வருமாறு.

"இந்த அரசியற்றிட்டம் இலங்கைக்குப் பெருமளவில் சுய ஆட்சி முறையை நல்ல அமைப்பில் வழங்குகிறது. இதைப் போன்ற நல்ல திட்டம் எனது டொமினியன்கள் எனப்படும் ஆணிலப்பத நாடுகள் எவற்றுக் கேனும் கொடுக்கப்படாதமையால் இது எவ்வாற்றானும் நிகரில்லாதது என்பது என் கருத்து."

குடியேற்ற மந்திரியார் எழுதியனுப்பிய செய்தி பின்வருமாறு படிக்கப்பட்டது.

"நான் குடியேற்ற மந்திரியாயிருந்த காலத்திலே ஏற்பட்ட திருத்தத்தின் பயனாக இவ்வரசாங்கசபை எனது உத்தியோக காலத்திலே திறக்கப்பட்டதை அறிந்து வெகுவாக மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சபையினமைப்பு எனது நண்பர் டிரமன்சீல் அவர்களுடைய ஆலோசனையின் வண்ணமே ஏற்பட்டதாகும். நிர்வாக சபைகள் மூலம் பரிபாலிக்கும் முறையில் எனக்கு நிரம்பிய அநுபவம் உண்டு. எனவே அது நல்ல முறையென நான் உறுதியாகக் கூறுவேன். உங்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் நான் நிரம்பிய அநுதாபம் உள்ளவனாகவே என்றும் இருந்தமைபோல இனிமேலும் தொடர்ந்து உடந்தையாக இருப்பேன்."

### மீள் பார்வை

இவ்விரு செய்திகளையும் படித்தபின்னர் ஆள்பதி சேர் கிறேம்தோம்சன் தமது அரசாங்கப் பேச்சை நிகழ்த்தினார். அதில் அவர், "இலங்கையின் ஆள்பதி என்ற முறையில் அரசாங்க அலுவல்களை ஆலோசிக்கும் முகமாகவும் அரும்பணி செய்யுமுகமாகவும் இலங்கை வாழ் பொதுமக்களால் சர்வசன வாக்குரிமைப் பலத்தால் தெரிந்தனுப்பப்பட்டவர்களாய உங்களை அன்புடன் இந்தச் சபையில் வரவேற்கின்றேன். உங்களைக் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் இலங்கையின் வடபாகத்தின் நான்கு தொகுதிகளின் பிரதி நிதிகளுடைய ஆசனங்கள் வெற்றிடமாய் இருப்பதைப் பார்க்க எனக்கு அதிக விசனமாய் இருக்கிறது. இப்புதிய அரசியற்றிட்டத்தைப் பற்றி அவர்கள் பிழையாக விளங்கிக் கொண்டமையாற் போலும் அவர்கள் ஒன்றி ஒதுக்கல்செய்து கொண்டார்கள். இலங்கையின் குடிசனங்களில் முக்கியமான இச்சாகியத்தார். பிரதிநிதிகளை அனுப்பாதிருப்பது வருந்த வேண்டிய காரியமாகும். அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு ஏற்ற முறையில் நியமன நாளைக் குறித்து விடுவதற்கு நான் என்றும் ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறேன்." எனக் கூறினார்.

அரியணைப் பேச்சு நிறைவேறியதும்

**க.சி.குலரத்தினம்**

அரசாங்க சபையின் உதவி வாசகர், நிர்வாகசபையின் உதவித் தலைவர் ஆகிய இருவரும் தெரியப்பட்டனர். திருவாளர் மதவல அவர்களுக்கு 25 வாக்குகளும் திருவாளர் F.A. ஒபயசேகர அவர்களுக்கு 28 வாக்குகளும் அளிக்கப்பட்டமையால் திருவாளர் ஒபயசேகர உதவி வாசகராகத் தெரியப்பட்டார். நிர்வாக சபையின் உபதலைவர் பதவிக்காக திரு. V.S விக்கிரமநாயக அவர்களுக்கும் திருகோணமலை-மட்டக் களப்புப் பிரதிநிதி திரு. M.M சுப்பிரமணியம் அவர்களுக்கும் இடையில் போட்டி நிகழ்ந்தது. அதிலே சுப்பிரமணியத்துக்கு 28 வாக்குகளும் திரு. விக்கிரமநாயவுக்கு 23 வாக்குகளும் கிடைக்க இரு அங்கத்தவர் வாக்களியாதிருந்தனர். எனவே திரு. சுப்பிரமணியம் நிர்வாக சபையின் உதவித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் ஏழு நிர்வாக சபைகளும் A.B. என்ற நிலையற் குழுக்களிற் பிரிக்கப்பட்டன. A. பிரிவில் உள்நாட்டுநிர்வாகசபை, காணி விவசாய சபை, உள்ளூர் ஆட்சிச்சபை, கல்விச்சபை என நான்கும். B பிரிவில் சுகாதாரசபை, தொழில், கைத்தொழில் வர்த்தகசபை, போக்குவரத்து வேலைச்சபை என்பனவும் அமைந்தன.

பிற்காலத்தில் சுதந்திர இலங்கையில் புகழ் பூத்து விளங்கிய பெரியார்களும் அரசாங்க சபையிலே இருந்தார்கள். தேசபிதா எனவும் சுதந்திரத்தின் சிற்பி எனவும் பாராட்டப்படும் அதிகௌரவ திரு. D.S. சேனநாயக விவசாய நிர்வாக சபையின் தலைவராக இருந்தார்.

(தொடரும்.............)




வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையேயான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 13வயதுப் பிரிவில் அருணோதயாக் கல்லூரியும் 16வயதுப் பிரிவில் அராலி இந்துக்கல்லூரியும் 18வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டன. இதில் பங்குபற்றிய அணி வீரர்களைப் படத்தில் காணலாம். (படங்கள் - கோபி)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும்

### ஏனைய குழு அங்கத்தவரின் கடமைகள்

1. அங்கத்தினர்களுக்கு குழுவின் குறிக்கோள்கள், இலக்குகள் தீர்மானங்கள் பற்றித் தெளிவுபடுத்தல்.



2. குழுவினரின் வேலைகளை அங்கத்தவர் மத்தியில் பகிர்ந்தளித்தல்.

3. பொது மக்களுக்கு அமைப்பைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் விளக்கமளித்தல்.

4. குழுவினர் மத்தியில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பங்களிப்புச் செய்தல்.

5. கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளல், தீர்மானம் எடுப்பதில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்.

6. பொருத்தமான வழிமுறைகளை உபயோகித்து சிறந்த வாழ்க்கைக்கான நடத்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

7. எடுக்கப்பட்ட தீர்மானங்களை உரிய காலத்தில் அமுல்படுத்துவதாக தமக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் சரிவரச்செய்தல்.

8. தேவைக்கேற்ப நிறைவேற்றுக் குழுவினால் கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதல்.

செயற்குழுவினர் கடமைகளுக்கும், பொறுப்புக்களுக்கும் மேலதிகமாக அமைப்பின் சாதாரண அங்கத்தவர்களுக்கும் சில கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு. செயற்குழு இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதுடன் சாதாரண அங்கத்தவர்களுக்கும் இதைத்தெரிவிப்பது அவர்களின் கடமையாகும்.

மறுபக்கம் சாதாரண அங்கத்தவர்கள் தங்கள் பொறுப்புக்கள் பற்றி அறிந்திருப் பதுடன் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் கடமைகளை நிறைவேற்றவேண்டும். ஒரு கிராமிய மட்ட அமைப்பின் வெற்றிக்கு உறுதுணையாக சாதாரண அங்கத்தவரின் நிறைவேற்றவேண்டிய கடமைகளும் உரிமைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### சாதாரண உறுப்பினர்கள் கடமைகள்

1. அமைப்பினால் அழைப்பு அனுப்பப்படும் கூட்டங்களுக்கு தவறாது சமூகமளித்தல்

2. நிர்வாகக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

3. துணிவாகவும், தெளிவாகவும் தங்கள் அபிப்பிராயங்களை அமைப்பின் கூட்டங்களில் வெளிப்படுத்தல்.

4. செயற்குழு உறுப்பினர்களை வருடாந்தம் தெரிவு செய்வதில் தங்கள் பங்களிப்பினை வழங்குதல்.

5. செயற்குழு உறுப்பினர்களால் அல்லது நிர்வாகத்தினால் செய்யப்பட்ட தவறுகள் ஏதாவது இருப்பின் அதனைத் தயங்காது சுட்டிக் காட்டுதல்.

6. பொருத்தமான தந்திரோபாயங்களை உபயோகித்து ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

7. அமைப்புக்கு எதிரானதும், தவறானதுமான கருத்துக்களை (கூட்டங்களுக்கு வெளியே) வெளிப்படுத்துவதைத் தவிர்த்தல்.

### அணியாகத் தொழிற்படல் (Team Work)

செயற்குழு உறுப்பினர்களினதும் சாதாரண அங்கத்தவர்களினதும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பற்றி நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். வெவ்வேறு பதவி நிலைகளில் உள்ளவர்கள் தமக்குரிய வெவ்வேறு கடமைகளைச் செய்வதன் மூலம் சமூகத்தின் பொது இலக்கினை அமைய முடியும் என்பதனைப் பார்த்தோம். இந்தக் கடமைகளைப் பூர்த்தி செய்ய சிலசமயங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், பல சமயங்களில் குழுவாகவும் செயற்பட வேண்டியுள்ளது.

ஒரு அணியாக வேலை செய்தல் என்ற எண்ணக்கருவானது கிராமிய சமூகத்திற்கு ஒன்றும் புதிதானதல்ல. இது எமது சமூகத்தில் பாரம்பரியமாக வேரூன்றி உள்ளது. ஆனால் நவீனமயத்துடன் எங்களில் பலர் தங்கள் சொந்த நலனில் கூடிய கவனம் செலுத்துவதுடன் மிகக் குறைவாகவே தமது வளங்களையும் நேரத்தையும் அயலவர்களின் நலனுக்காக செலவு செய்யத்தயாராக உள்ளனர்.

ஆனால் சமூக அடிப்படை நிறுவனம் (CBOs & NGOs) என்ற ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந் துள்ளமை சமூகம் தனது பொது இலக்கை வெற்றிகொள்வதற்கோ மனதிற் கொள்ள வேண் டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு அணியாக வேலை செய்வதன்மூலமே எதிர்பார்த்த பெறுபேறுகளைப்

4

பெற்றுக்கொள்ள முடியும். நினைவில் கொள்ள வேண்டும்.

ஒ

குடும்பத்தை

உதாரணமாக எடுத்தால் குடும்பத்தின் குறிக்கோள் குடும்ப அங்கத்தவரின் அடிப்படை தேவை களைப் பூர்த்தி செய்வதும் மகிழ்ச்சியாக வாழ்வதும் ஆகும். இதற்காகத் தேவைகளை நிறைவு செய்யத் திட்டமிட்ட செலவு செய்தல், எதிர் காலத்திற்காக முதலீடு செய்தல், குடும்ப உறுப் பினர்களிடையே நல்லுறவைப் பேணுதல் என்பவற்றைச் செய்தல் வேண்டும். இக்குறிக்கோள்கள் தாய் அல் லது தந்தை ஒருவரால் மாத்திரம் அடைய முடியாது. தாய், தந்தை பிள்ளைகள் என ஒவ்வொருவரும் குறிக்கோள்களை அடைய குறிப்பிடத்தக்க பங்கை ஆற்ற வேண்டும். சில சந்தர்ப்ப ங்களில் அங்கத்தவர்கள் அனைவருமே ஒரு அணியாக வேலை செய்யவேண்டும். உதாரணமாக ஒரு விவசாயக் குடும்பத்தில் அறுவடைக் காலத் தின் போது குழப்பத்தின் அனைத்து உறுப் பினர்களும் அறுவடையில் ஈடுபடுவதன் மூலம் வேலை விரைவாக முடிவதுடன் செலவும் குறைவாக இருக்கும். (வெளியாட் களுக்கு கூலியாக வழங்கப்படும் செலவைக் குறைக்கலாம்.)

(தொடரும்)

**தி.திருசாந்**
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி

## 06.12.2008 முதல் 08.12.2009 வரை

**கார்த்திகை, 2, 3, 4 பாதங்கள்**
**ரோகிணி, மிருகசீடம் , 2பாதங்கள்வரை**
பெயரின் முதல் எழுத்துக்கள்: (இ, உ, ஏ, ஓ, வ, வி, வு, வே, வோ, உள்ளவர்களுக்கும்)

### வாய்ப்புகள் வாயில் தேடி வரும்!

பெருத்தன்மை கொண்ட மனமும் பிறரை மயக்கும் பேச்சாற்றலும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் குருப்பெயர்ச்சி இப்பொழுது வந்து விட்டது. ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவால் பொன், பொருள்கள் பெருகும் வாய்ப்பும், புகழ் கூடும் வாய்ப்பும், நண்பர்களின் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும் வாய்ப்பும், திறமைகள் பளிச்சிடும் வாய்ப்பும் வந்து சேரும்.

குருவின் பார்வை பலம் தான் வந்து கொடுக்கல், வாங்கல்களை ஒழுங்காக்கும். அஷ்டமாதிபதியாக உங்கள் ராசிக்கு குரு விளங்கினாலும் , அது நீச்சம் பெற்றல்லவா உங்கள் ராசியைப்பார்க்கிறார். எனவே கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கிணங்க ராஜயோகமான அமைப்பைக் காணப் போகிறீர்கள்.

### திட்டமிடாது செய்து வெற்றி பெறுபவர் நீங்கள்!

உங்களது கவர்ச்சியான தோற்றமும் , பேச்சாற்றலும் தான் காரிய வெற்றிக்கு உறுதுணையாக இருக்கின்றது. உங்களைச் சார்ந்தவர்களுக்கு ஏதேனும் பிரச்சினை என்று வந்துவிட்டால் அதை எதிர்த்து போராடுவதில் முதல் ஆளாக நீங்கள் நிற்பீர்கள். பொது வாழ்வில் ஈடுபட்டுப் புகழ் குவிப்பவர்கள் நீங்கள் தான்.

அள்ளிக்கொடுப்பதில் வல்லவனாக விளங்கும் சுக்ரன் உங்கள் ராசிக்கு அதிபதியாக இருப்பதால் எல்லா யோகங்களும் உங்களுக்கு வந்து சேரும். உங்கள் ராசியில் தான் சந்திரன் உச்சம் பெறுகிறார். சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சந்திரன், உச்சம் பெறும் ராசியாக உங்கள் ராசி இருப்பதால் உங்கள் யோசனைகளைக் கேட்டு நடந்தவர்கள் வெற்றி பெறுகிறார்கள். உங்களிடம் எந்த பொறுப்பை கொடுத்தாலும் அதை எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடித்து விடுவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களையெல்லாம் வழங்கப் போகிறது. என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

முப்பெரும் பார்வையால்
ஏற்படும் முன்னேற்றம்
ஒன்பதில் குருவும் நின்றால்
உயர்வுகள் வந்து சேரும்!
நண்பர்கள் ஒத்துழைப்பால்
நலம் யாவும் வந்து கூடும்!
இன்பத்தின் எல்லை காணும்!
இனியதோர் வாழ்வு கிட்டும்!
பொன்னான தொழில்கள் வாய்க்க
புதுப்பாதை அமையும் உண்மை!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவால் உயர்வுகளே அதிகம் வந்து சேரும். ***கவலை*** என்ற மூன்றெழுத்து உங்கள் அகராதியை விட்டு அகலப்போகிறது.

உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. ஜென்ம ராஷியின் மீதும் மூன்றாமிடத்திலும், ஐந்தாம் இடத்திலும் தன் பார்வையைக் குரு பதிப்பதால் இதுவரை இருந்த ஆரோக்கியப் பாதிப்புகள் இனி அகலும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. இப்பொழுது அதன் பார்வை பலத்தால் பூர்வ புண்ணியம் , பிள்ளைகள் சம்பந்தப்பட்ட முடிவு, பெற்றோர் வழிச் சொத்துக்கள், வரவு–செலவு , சகோதர ஒற்றுமை, குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள், வழக்குகளில் வெற்றிகள், அடிப்படை வசதிகள் ஆகிய ஆதிபத்யம் பெறும் இடங்கள் எல்லாம் புனித மடைவதால் அவை அனைத்திலும் உள்ள குறைபாடுகள் அகன்று இனிமையான வாழ்க்கை அமையும்.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!

பொதுவாகக் குரு பார்க்கக் கோடி நன்மை என்பது பழமொழி. ஆனால் குரு உங்கள் ராசி நாதன் சுக்ரனுக்கு பகைக்கிரகமாகும். அப்படியானால் அதன் பார்வை எப்படிப்பலன் தரும். என்று நீங்கள் நினைக்கலாம். குரு , மகர ராசியில் நீச்சம் பெற்றுப் பார்ப்பதால் உங்கள் வாழ்க்கையில் உச்சமான நேரமாக இக்காலம் அமையப்போகிறது.

அண்ணன் என்னடா, தம்பி என்னடா அவசரமான உலகத்திலே... என்று சொல்லிய நீங்கள் அண்ணனும் , தம்பியும், அக்காவும், தங்கையும்தான் அவசரத்திற்கு கை கொடுப்பர் என்று சொல்லப் போகிறீர்கள். பாசம் கூடும் இந்த நேரத்தில் பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தி வைப்பீர்கள் அந்நிய தேசத் தொடர்பு எண்ணியபடி நடக்கும்.

பெற்றோர் வழிச் சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் இருந்த தடை நீங்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் ஒற்றுமையைக் கண்டு மூக்கில் விரலை வைப்பர். வட்டி, வட்டியாகக் கட்டி வருமானம் தீர்ந்து விட்டதே என்று கவலைப் பட்ட நீங்கள், இனித் திட்டமிட்ட படியே செல்வத்தைச் சேர்த்து சேமிப்பை உயர்த்தப்போகிறீர்கள். அடகு வைத்த நகைகள் மீட்கப்பட்டு அலமாரிக்கும் வந்து சேரப்போகிறது.

### வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் வளர்ச்சி கூடும்!

உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாகவும் குரு விளங்குவதால் அதற்குரிய வழிபாடு உங்களுக்கு அவசியம் தேவை. அதே நேரத்தில் ராசிநாதன் சுக்ரனாக விளங்குவதால் அதற்குரிய வழிபாட்டையும் நீங்கள் சேர்த்து செய்ய வேண்டும்.

சுயஜாதக அடிப்படையில் நவாம்ச.ரீதியாகத் தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து சிறப்பு தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவதன் மூலமும் , வியாழன் மற்றும் வெள்ளியில் தேவகுரு மற்றும் அசுர குருவை

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

வழிபட்டு வருவதன் மூலமும் தித்திப் பான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும்.

### வாகன யோகத்தால் வளர்ச்சி பெறும் நேரம்!

(6.12.2008முதல் 19.1.2009 வரை)

சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, செல்வாக்கு மேலோங்கும், செலவிற் கேற்ற வரவு வந்து சேரும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பயணங்களால் பலன் கிடைக்கும் தாய்வழி ஆதரவு பெருகும். இடம், பூமி வாங்கி ஏற்றம் பெறுவீர்கள் மனைகட்டிக்குடியேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் வந்து சேரும்.

### சகோதர ஒற்றுமை பலப்படும் நேரம்!

(20 .1.2009 முதல் 21.13 .2009வரை)

சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது வந்த வாய்ப்புகளை எல்லாம் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இதுவரை கசந்த காலங்களாக இருந்தவைகள் இப்பொழுது வசந்த காலங்களாக மாறும் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருங்கால நலன் கருதிப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வளர்ச்சிக்கு வித்திட நண்பர்கள் முன்வருவர். செல்வ நிலையில் இதுவரை இருந்த தேக்கம் மாறும். உத்யோகத்தில் உயர்வு கிட்டும்.

### சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம்!

(22.3.2009 முதல் 8.12 .2009வரை)

செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத விதத்தில் ஏதேனும் விரயங்கள் ஏற்படலாம். குறிப்பாக வாழ்க்கைத்துணை வழியிலும் செலவிடக்கூடிய சூழ்நிலை உருவாகும். வரவைக்காட்டிலும் செலவு கூடுகிறதே என்ற கவலை அதிகரிக்கும். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும். உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் பேசுபவர்களை இனம் கண்டு கொண்டு பழகினால் எடுத்த காரியங்களில் வெற்றி காணலாம்.

1.5.2009.முதல் 15.8.2009வரை கும்ப ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். கும்பத்தில் குரு உலாவரும் நேரத்தில் உத்யோகம் மற்றும் தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. தேனாக. பேசுவதன் மூலமும், தெய்வீக ஈடுபாட்டை அதிகரித்துக்கொள்வதன் மூலமும் வீண் பழிகள் அகலும். விரிசல்கள் குறையும். இந்த நேரத்தில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம், வரும் துயரங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள இயலும். பதவி மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம் போன்ற மாற்றங்களில் ஏதேனும் ஒரு மாற்றம் இருக்கும் இடம்தேடி வரலாம்.

### கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரம்!

(29.6.2009 முதல் 12.11.2009 வரை)

இந்தக்காலத்தில் குரு வக்ரகதியில் இயங்குகிறார். உங்களுக்கு இக்காலமும் இனிய காலம்தான். காரணம். அஷ்டமாதிபதியாக குரு அமைவதால் தான். ஆயினும் 11மிடத்திற்கும் அதிபதியாக அல்லவா குரு விளங்குகிறார். எனவே இலாபம் வருவதில் சிறு சிறு தடைகள் உருவாகலாம். ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை வந்து சேரலாம். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. தொழிலில் ஏமாற்றத்தை தவிர்த்து ஏற்றத்தை உருவாக்கி கொள்ளவும் தாமாக முன்வந்து மற்றவர்கள் உதவி செய்யவும் தக்க விதத்தில் வழிபாடு உங்களுக்கு கைகொடுக்கும். குருப் பெயர்ச்சிக்கு முன்னதாகவே நடைபெறும். குருப்பெயர்ச்சி ஹோமங்களில் கலந்துகொண்டு குருவின் அருளை முதன் முதலில் பெற்றால் முன்னேற்றங்கள் தானாகவே வந்து சேரும்.

### ரிஷப ராசி பெண்களுக்கு

ரிஷப ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கப் போகிறது. மாக்கோலம் போடும் மங்கையர்கள் மணக்கோலம் காண வழி பிறக்கும். கணவன்–மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பணவரவு அதிகரிக்கும் என்பதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாம் என்று குடும்பத்தினர் சம்மதிப்பர். உற்சாகம் நிலையாக இருக்க ஒரு முறை உங்கள் சுய ஜாதகத்தை அலசிப் பாருங்கள். அதில் உள்ள தெசா புத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபாடுகளை செய்து வந்தால் வாழ்க்கைப் பாதையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

### பலன் தரும் வழிபாடு !

ஒன்பதில் சஞ்சரிக்கும் குருவால் ஒளிமயமான எதிர்காலம் வந்து சேரவும் வருங்காலம் செல்வங்கள் வரும் காலமாகவும் மாற வைரவர் வளம் தரும் தெட்சிணா மூர்த்தியையும் வழிபட்டு முன்னேற்றத்தை கூட்டிக்கொள்ளுங்கள்.

**வளரும்**

---

# தமிழக முதல்வர் கருணாநிதியை தோற்கடித்த ஜனாதிபதி மஹிந்த

## தெற்கு ஊடகங்கள் புகழாரம்

(கொழும்பு)

தமிழ்நாட்டின் அழுத்தங்களை முறியடித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய மத்திய அரசின் அனுசரணையுடன் போரை தொடர்ந்து முன்னெடுத்துவருவது தென்பகுதியில் பலத்த வரவேற்பை பெற்றுள்ளதாக கொழும்பு ஆங்கில சிங்கள வாரஏடுகள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அந்த வார ஏடுகள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 17ஆம் திகதி 63ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். இந்த பிறந்த நாள் அவருக்கு இரண்டு மகிழ்ச்சியான தகவல்களைக் கொண்டிருந்தன. ஒன்று பூநகரிப்பிரதேசத்தை படையினர் கைப்பற்றியது.

இரண்டாவது தமிழ் நாட்டின் அழுத்தத்தை முறியடித்தது. போர் நிறுத்தம் மேற்கொள்ளுமாறும் வான் தாக்குதல்களை நிறுத்துமாறும் தமிழக மக்களும் முதல்வர் கருணாநிதியும் மேற்கொண்ட அழுத்தங்களை மஹிந்த வெற்றிகரமாக தோற்கடித்து போரை தொடர்ந்து மேற்கொண்டுவருவது தென்பகுதி ஊடகங்களின் பாரிய எழுச்சி ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெற்றுவரும் போருக்கு இந்திய மத்திய அரசு பச்சைக்கொடி காட்டியதால் உற்சாகம் அடைந்த ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷ விடுதலைப்புலிகளை சரணடையுமாறு அறை கூவல் விடுத்துள்ளார் என அந்த ஏடுகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஆட்சி புரியும் இந்திய மத்திய அரசின் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் தமிழகம் ஏறத்தாள 39 உறுப்பினர்களை கொண்டுள்ளபோதும் அதன் வலிமையை புறந்தள்ளி இலங்கை அரசு இந்திய மத்திய அரசை தனது பிடிக்குள் கொண்டுவந்துள்ளது.

பெரும் ஆச்சரியமானது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(5)

---

# வடக்கு,கிழக்கில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு 10 மில்லியன் ரூபா காப்புறுதி வழங்க வேண்டும்

## அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அனைத்து அரசாங்க வைத்தியர்களுக்கும் 10 மில்லியன் ரூபா காப்புறுதியை வழங்க வேண்டுமென்பது உட்பட நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைக்க அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அக்கோரிக்கைகளை இருவார காலத்திற்குள் நிறைவேற்றாவிட்டால் இரு மாகாணங்களிலும் அவசர சேவைகளை இடை நிறுத்துவதென சங்கம் முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குடா அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் பாலித பத்மகுமார அண்மையில் சுட்டுக்கொல்லப் பட்டதையடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரிந்த சிங்கள வைத்தியர்கள் அநேகர் அங்கிருந்து வெளியேறினர்.

இதனால் அங்கு வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கக்கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அனைத்து அரசாங்க டாக்டர்களுக்கும் 10 மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதி, போக்குவரத்து வசதிகள், பூரண பாதுகாப்பு, பாதுகாப்புடனான தங்குமிட வசதி போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

அத்துடன் இக்கோரிக்கைகளை இரு வாராங்களுக்குள் நிறைவேற்றாவிட்டால் அவசர சேவைகளை நிறுத்தி விடவும் சங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


(5)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு


## மாதிரி வினாத்தாள் -விஞ்ஞானம்- I

### 1 மணித்தியாலம்


1. யாதாயினும் ஒரு பொருளின் ஒரு கிலோ கிராமின் வெப்பநிலையை $1^0C$ இனால் உயர்ந்த தேவையான வெப்பத்தின் அளவானது அப்பொருளின் தன்வெப்பக் கொள்ளளவு எனப்படும். அது அளவிடப்படும் அலகு பின்வருபவை யாது?
   1) J/Kg°C 2) J/g°C 3) Kg°C/J 4) KJ/g°C
2. வளியிலே ஒலி செல்வது
   1) நெட்டாங்கு அலைகளாக 2) குறுக்கு அலைகளாக
   3) நிலையான அலைகளாக 4) மின்காந்த அலைகளாக
3. தடையி, திரான்சிஸ்ரர், இருவாயி, ஒடுக்கி ஆகியவற்றின் முடிவிடங்கள் மாத்திரம் வெளியே இருக்குமாறு மூடப்பட்டுள்ள நான்கு பெட்டிகள் வேறுவேறாக உள்ளன. அவற்றின் முடிவிடங்களின் எண்ணிக்கையிலிருந்து மாத்திரம் இனங் காணப்படத்தக்கது யாது?
   1) தடையி 2) திரான்சிஸ்ரர் 3) இருவாயி 4) ஒடுக்கி
4. நீர், தேங்காயெண்ணெய், இரசம், தெரப்பந்தைலம் என்னும் நான்கு திரவங்களில் எத்திரவத்தைப் பயன்படுத்தும் போது குறைந்த உயரமுள்ள பாரமானியை அமைத்துக் கொள்ளலாம்.
   1) நீர் 2) தேங்காயெண்ணெய் 3) இரசம் 4) தெரப்பந்தைலம்
5. பின்வரும் A,B,C,D என்னும் இரசாயனச் சமன்பாடுகளில் சமப்படுத்திய சமன்பாடுகள் எவை?
   A) $CaCo_3 \rightarrow Cao + Co_2$ B) $NaOH + HOl \rightarrow NaCl + H_2O$
   C) $KmnO_4 \rightarrow K_2Mno_4 + O_2$ D) $Mg + H_2SO_4 \rightarrow MgSo_4 + H_2$
   1) A,B ஆகியன 2) A,B,C ஆகியன
   3) A,B,D ஆகியன 4) A,D ஆகியன
6. ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. இங்கு மூலகம் பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானது. (X அம் மூலகத்தின் உண்மையான குறியீடன்று)





   1) X ஆனது குறைந்த தாக்குதிறனுள்ள மூலகமாகும்
   2) X ஓர் உலோகம்
   3) X ஆனது தாக்குதிறனுள்ள மூலகம்
   4) X இன் அணுவின் இறுதி ஓட்டில் இரு இலத்திரன்கள் இருக்கின்றன.
7. ஒரு வித்திலைத் தாவரங்களுக்கு மாத்திரம் உரிய சிறப்பியல்பு
   1) நார் வேர்கள் இருத்தல் 2) ஆணி வேர்கள் இருத்தல்
   3) தண்டு கிளை கொள்ளல் 4) வலையுருவ நரம்புகள் இருத்தல்
8. தாவரங்களிலே தொகுக்கப்பட்ட உணவு பின்வரும் எக்கட்டமைப்பினால் கொண்டு செல்லப்படுகின்றது?
   1) காழ் 2) உரியம்
   3) மையவிழையம் 4) வேலிக்காற் புடைக்கல விழையம்
9. மனிதனின் வாயிலே உமிழ்நீரின் தாக்கத்தால் ஆரம்பிக்கப்படும் உணவுக்கூட்டம்
   1) கொழுப்புகள் 2) புரதங்கள் 3) மாப்பொருள் 4) விற்றமின்கள்
10. வீடுகளிலே பயன்படுத்தப்படும் நான்கு பொருட்கள் கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ளன
    A) எலுமிச்சம்பழச்சாறு B) அப்பச் சோட
    C) சுண்ணாம்பு D) வினாகிரி
    இவற்றில் அமிலப் பொருள்கள்
    1) A,C ஆகியன 2) A,D ஆகியன 3) A,B ஆகியன 4) C,D ஆகியன
11. தாவரத்திலிருந்து பெற்ற சிறிய இழையத்துண்டிலிருந்து குறுகிய காலத்திலே தாய்த் தாவரத்தின் இயல்புகளை ஒத்த இயல்புகளை உடைய தாவரங்கள் பலவற்றைப் பெறத்தக்க இனம் பெருக்க முறை
    1) பதி வைத்தல் 2) அரும்பொருட்டு
    3) கிளையொட்டு 4) இழைய வளர்ப்பு
12. சீனிக் கரைசல் ஒன்றில் நீரமானி அமிழ்ந்து மிதக்கிறது. அக்கரைசலினுள் சிறதளவு நீர் விட்டால் நடைபெறக் கூடியது.
    1) மேலும் அமிழும்
    2) அமிழும் பாகம் குறைவாக இருக்கும்
    3) மாற்றம் ஏற்படாது
    4) திடமான முடிவிற்கு வரமுடியாது
13. சேர்வைகள் உருவாவதற்கு முக்கிய காரணமாக அமைவது
    1) மூலகங்கள் இணைதல்
    2) மூலகங்களின் அணுக்கள் இலத்திரன் இழத்தல் / பங்கிடுதலினால்
    3) மூலகங்களின் அணுக்கள் வலுவளவால் இணைதல்
    4) வெவ்வேறு மூலக அணுக்கள் இரசாயன ரீதியில் இணைதல்
14. "திணிவு மாறா விதி" யாரால் சரியான முறையில் முன் மொழியப்பட்டது
    1) போயில் 2) லாவோசியர் 3) டால்ட்டன் 4) பேர்சீலியஸ்
15. 




மாணவரினால் வடிவமைக்கப்பட்ட கல மாதிரி ஒன்று தரப்பட்டுள்ளது. இதில் ஏகார் ஜெலி ஊடகத்தில் மாபிள் ஒன்று இடப்பட்டுள்ளது ஏகார் ஜெலி ஊடகம் குழிய முதலுருவிற்கு பதிலாகப் பாவிக்கப்பட்டதன் நன்மை
    1) முப்பரிமாணத் தோற்றம் 2) ஒளி ஊடுருவும் இயல்பு
    3) அதன் பாகுத் தன்மை 4) மேற்கூறிய யாவும் சரியானவை
16. 





மேற்படி விளக்கப்படத்தில் B என்பது ஒரு பாய்மம் ஆகும் இது தொடர்பான தவறான கூற்று எது?
    1) இது எமது அகச் சூழல் ஆகும்
    2) இது நிணநீர்க்கானின் ஊடாகப் பாய்ந்து செல்லும்
    3) குருதிக்கும் இதற்கும் ஒரு போதும் தொடர்பு இல்லை
    4) இதனூடாகப் பதார்த்த பரிமாற்றம் நிகழும்
17. மின்குமிழ் ஒன்றின் இழை ஆக்கப்ட்டுள்ள உலோகம்
    1) பித்தளை 2) தங்குதன் 3) நிக்கல் 4) நிக்குரோம்
18. $^{39}_{19}X$ எனும் மூலகத்தில் காணப்படும் நியூத்திரன்களினதும் புரோத்தன்களினதும் எண்ணிக்கைகள் முறையே
    1) 20,19 2) 39,19 3) 19,19 4) 39,20
19. அவரைக் குடும்பத் தாவரமான சணல் தாவரத்தைப் பிடுங்கிப் பார்த்த மாணவன் ஒருவன் வரைந்த வேரின் அமைப்பு யாதாக இருக்கலாம்.



20. தரப்பட்டவற்றில் மின்காந்தத் தூண்டல் பயன்படும் சந்தர்ப்பம்
    1) நிலை மாற்றி 2) மின்மோட்டார் 3) இடறு ஆளி 4) தலைமை ஆளி
21. மனித உடலில் அமைந்துள்ள கானற்ற சுரப்பியாகவும் கானுள்ள சுரப்பியாகவும் தொழிற்படும் அங்கம்
    1) சதையி 2) கபச்சுரப்பி
    3) உமிழ்நீர்ச்சுரப்பி 4) கேடயப் போலிச் சுரப்பி
22. தரப்பட்டவற்றில் காந்தப் புலத்தின் திசையை அறிய உதவும் கருவி எது?
    1) குண்டூசி 2) பொன்னிலைமின்காட்டி
    3) காந்த ஊசி 4) சட்டக்காந்தம்
23. வாயுக்களின் கரைதிறன் தொடர்பாக மாணவர் சிலரின் கூற்றுக்கள் வருமாறு
    A – எல்லா வாயுக்களும் நீரில் நன்கு கரையும்
    B – வெப்பநிலை அதிகரிப்பு வாயுக்களின் கரைதிறனை குறைக்கிறது
    C – அமுக்கம் அதிகரித்தால் வாயுக் கரைதிறன் அதிகரிக்கும்
    D – மேற்படி கூற்றுக்களில் சரியானவை.
    1) A,B 2) B,C 3) A,C 4) A,B,C
24. தன்னியக்க முறையில் முழுவீட்டிற்குமான மின்னோட்டத்தைத் துண்டிக்கும் கருவி எது?
    1) பரம்பல்பெட்டி 2) பிரதான ஆளி
    3) நுண்மின்கூற்றுடைப்பான் 4) இடறு ஆளி
25. முழு அகத்தெறிப்பின் ஒரு விளைவாக கருதக்கூடியது
    1) வானவில் 2) கானல்நீர்
    3) விம்பம் தோன்றல் 4) நிழல் தோன்றல்
26. ஒலி முதல் ஒன்றின் சுருதி பின்வரும் எதனில் தங்கி உள்ளது.
    1) அலை நீளம் 2) அலை வடிவம் 3) ஒலியியல்கருவி 4) அதிர்வெண்
27. அயடீன் பளிங்கு எத்திரவத்தில் நன்கு கரையும்
    1) எதனோல் 2) நீர் 3) மண்ணெய் 4) எக்சேன்
28. மதுரக் கலங்களினால் விடுவிக்கப்படும் நொதியம் எது?
    1) அமிலேசு 2) தயற்றேசு 3) சைமேசு 4) அற்ககோல்
29. கூற்று A :- இடி மின்னலின் போது வளியில் உள்ள நைதரசன் நைதரசனீர் ஒட்சைட்டாக மாற்றப்படுகிறது.
    கூற்று B :- அதனால் மண்ணில் நைதரசன் வளம் அதிகரிக்கிறது.
    இக்கூற்றுக்கள் தொடர்பான சரியான முடிவு.
    1. கூற்றும் காரணமும் சரியானவை
    2. இரண்டும் தவறானவை
    3. இரண்டும் சரியானவை போதிய விளக்கமில்லை
    4. கூற்று A சரியானது கூற்று B தவறானது
30. கடல் உணவு உட்கொள்ள முடியாத மலைநாட்டுச் சூழலில் ஏற்படும் நோய்த்தாக்கம் எது?
    1) சிறுநீரகக்கல் 2) மாரடைப்பு 3) குடற்புண் 4) கண்டக்கழலை
31. இரசாயனத்திருப்ப அசைவிற்கு உதாரணமாக அமைவது எது?
    1) தொட்டாற் சுருங்கியின் அசைவு
    2) வேர்கள் நிலத்தை நோக்கி வளர்தல்
    3) மகரந்தமணி முளைத்து சூலை நோக்கி வளர்தல்
    4) தாவரக் கிளைகள் ஒளியை நோக்கி வளர்தல்
32. மனித இனப் பெருக்கத்தொகுதியில் கருக்கட்டல் நடைபெறும் இடம் எது?
    1) யோனிமடல் 2) கருப்பை 3) பலோப்பியன் குழாய் 4) சூலகம்
33. சவர்க்காரம் தயாரிக்கப் பயன்படும் இராசயனப் பொருள் எது?
    1) கல்சியம் காபனேற்று 2) சோடியம் ஐதரொட்சைட்டு
    3) அமோனியம் ஐதரொட்சைட்டு 4) மக்னீசியம் குளோரைட்
34. மேலிருந்து கீழ்நோக்கி சுயாதீனமாக விழும் பொருள் ஒன்றின் இயக்கத்தைக் காட்டும் வேகநேர வரைபுகளில் கதியானது எது?




35. தரப்பட்டவற்றில் NPN திரான்சிஸ்டரைக் குறிக்கும் குறியீடு எது?




36. வானொலி அலைகள் ஊடுகடத்தும் போது மின்காந்த அலைகளும் கேள்மீடிறன் அலைகளும் கலப்புச் செய்யும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்
    1) மட்டிசைப்பு 2) மீடிறன் விரியலாக்கம்
    3) புனருற்பவம் 4) மட்டிசைப்பு அழித்தல்
37. தென்னை மரம் ஒன்று கிளைகள் கொண்டதாகவும் அக்கிளைகளில் காய்கள் உள்ளது போலவும் தோன்றும் புகைப்படம் ஒன்றை பார்க்கும் சந்தர்ப்பம் உமக்குக் கிடைத்தது. அது தொடர்பாக நீர் எடுக்கக்கூடிய முடிவு.
    1) தென்னை இரு வித்திலைத்தாவரமாகும்.
    2) இப்புகைப்படம் நம்பகத்தன்மை அற்றது.
    3) அத்தென்னையை நேரில் பார்த்து ஆராய வேண்டும்
    4) சில விதிவிலக்கான தோற்றப்பாடுகள் இயற்கையில் உள்ளன.
38. இலங்கையின் வடபிரதேசத்தில் பெறக்கூடிய சாறெண்ணெய் (Essential Oils) எதுவாக இருக்கலாம்.
    1) கறுவா எண்ணெய் 2) யூக்கலிப்ரஸ் எண்ணெய்
    3) கராம்புத் தைலம் 4) ஒலிவ் எண்ணெய்
39. அங்கி ஒன்று ஈரலிப்பான தோலும் தூக்கமற்ற உடலும் துண்டுபட்ட உடலும் உடையதாகக் காணப்பட்டது. இவ்வங்கி எக்கணத்தைச் சேர்ந்தது என நீர் கருதுகிறீர்
    1) மொலஸ்கா 2) ஆத்திரோபோடா 3) அனலிடா 4) பிஸ்செஸ்
40. "சந்திராயன் I" என்னும் விண்கலத்தை இந்தியா விண்ணிற்கு அனுப்பி வைத்துள்ளது. இச்செய்தி மூலம் நாம் கிரகிக்கக் கூடிய விடயம்.
    1) இந்தியா தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னேறி உள்ளது.
    2) இந்தியாவிற்கு உலக நாடுகள் உதவி செய்கின்றன.
    3) இந்தியத் தொழில்நுட்ப வளர்ச்சி இலங்கைக்கும் பயன்படும்.
    4) இந்தியா விரைவில் மனிதனை சந்திரத்தரையில் இறக்கும்.

# 28ஆண்டுகளில் உலக நாடுகளெல்லாம் ஒரு குடையின் கீழ் இந்தியாவுடன் இணையும்

## பிறந்த தினச்செய்தியில் பகவான் சத்ய சாயி பாபா

(நகரி)

எதிர்காலத்தில் இந்தியா வலிமை மிக்க வல்லரசாக மாறும் என்று பகவான் சத்ய சாயி பாபா தனது பிறந்த நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பகவான் சத்ய சாயி பாபாவுக்கு நேற்று முன்தினம் 83ஆவது பிறந்த நாள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அவரது பிறந்த நாளை அவரது பக்தர்கள் சிறப்பாக கொண்டாடினார்கள்.

ஆந்திரா மாநிலம், புட்டபர்த்தியில் உள்ள சத்திய சாயி ஆச்சிரமத்தில் கடந்த ஒரு வாரமாக சாயிபாபாவின் பிறந்த நாள், பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் கலை விழாக்களுடன் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.

தனது பிறந்த நாளையொட்டி பகவான் சத்ய சாயிபாபா வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது,

வர இருக்கும் 28ஆண்டுகளில் இந்தியா வல்லரசு நாடாக உருவெடுக்கும். உலக நாடுகள் எல்லாம் ஒரே குடையின் கீழ் வந்து , நமது நாட்டுடன் இணைந்துவிடும். அனைவரும் இந்திய மக்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைவார்கள் .

நமது கலாசாரம் மிகவும் உயர்ந்தது. நமது பழம்பெரும் சம்பிரதாயங்கள், கலாசாரம் , புத்திக்கூர்மை முன் யாரும் சமமாக முடியாது. இவையே நமது நாட்டை உச்சத்திற்கு அழைத்துச்சென்று வல்லரசு நாடு என்ற அந்தஸ்தைப்பெற்றுத்தரும்.

### வெளிநாடுகளுக்கு அனுப்பாதீர்கள்

இன்றைய கல்வி வாழ்க்கைக்கு , குடும்பத்திற்கு பணம் சம்பாதித்து கொடுப்பதற்கு மட்டுமே துணைபோவதாகவுள்ளது.

இதன் காரணமாகவே கோடி, கோடியாக சம்பாதிக்க வேண்டும் என்னும் பேராசையில் கல்வி முடிந்ததும் மாணவர்கள் வேலை தேடி வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

அங்கு கெட்ட பழக்க, வழக்கங்களுக்கு அடிமையாகி , திரும்பி வருகின்றனர். ஆகவே பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பாதீர்கள்.


### இந்தியாவில் பிறப்பது பாக்கியம்

யாகங்களும், ஹோமங்களும் நடத்தினால் அமைதி கிடைக்காது. அது எங்கிருந்தோ வராது. இந்தியத்திருநாட்டில் பிறக்கும் பாக்கியம் நமக்கு கிடைத்திருக்கிறது. நம் நாட்டில் கிடைக்காதது எதுவுமில்லை.

என்னையும் வெளிநாடுகளுக்கு வந்து விடும்படி பல ஆண்டுகளாக அழைக்கின்றனர். விமானங்களில் அழைத்துச்செல்கிறோம், பட்டுக்கம்பளத்தில் நடக்க வைக்கிறோம் எனக்கேட்டுக்கொள்கின்றனர். எனக்கு எதற்கு விமானங்கள் எனக்கு இந்தியா நாடு தான் விமானம். நான் உங்களிடம் எதிர்பார்ப்பது பக்தி மட்டும் தான்.

### அரசியலில் தொடர்பு இல்லை

அரசியல் காரணமாகத்தான் பல வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. எனக்கும் அந்த அரசியல் கட்சியுடனும் தொடர்பு இல்லை. எனக்கு ஒரே கட்சி தான் அது அன்புக்கட்சி.



உங்களில் யாரையாவது நான் வரச் சொல்லி அழைத்தேனா? இவ்வளவு பேர் வந்திருக்கின்றீர்கள், எதற்கு ? அன்பு தான் உங்களை வரவழைத்தது. நீங்கள் தேர்ந்தெடுத்து பழகவேண்டிய வழி அன்பு வழி.

### ஜாதி -மதம் இல்லாத சமுதாயம்

பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளுக்கு கல்வியுடன், நமது கலாசாரத்தையும் கற்றுக்கொடுக்கங்கள் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த கற்றுக்கொடுங்கள். ஜாதி , மதம் இல்லாத புதிய சமுதாயத்தை உருவாக்க வழி செய்யுங்கள்.

இவ்வாறு சத்ய சாயி பாபா தனது பிறந்த நாள் செய்தியில் கூறியுள்ளார். (5)

## கிறிஸ்மஸ்ஸிற்காக 8ஆம் திகதி முதல் மடுத்திருத்தலம் திறக்கப்படும்

## அரசு உறுதியளிப்பு

(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகைக்காக எதிர்வரும் டிசம்பர் 8ஆம் திகதிக்கு பின்னர் மடுத்திருத்தலம் அடியார்களுக்காக திறக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ச இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மா நாட்டின் குழு ஒன்று பசில் ராஜபக்ஷவை அண்மையில் சந்தித்து உரையாடியது.

இதன் போது மடுப் பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றம் அடியார்களுக்கான வசதிகள் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

திருத்தலத்தின் சுற்றாடலில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் பல இன்னும் அகற்றப்படாமையால், பல கால்நடைகள் மரணமான சம்பவங்கள் குறித்தும் ஆயர் மாநாட்டின் போது சுட்டிக்காட்டப்பட்டது. (5)

## சாவ.பிரதேச செயலகத்தால் விண்ணப்பம் கோரல்

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி மற்றும் வரணி ஆகிய நான்கு பகுதிகளுக்கும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சிப்பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தைச்சேர்ந்த 30-58 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பத்தை சுயமாக தயாரித்து எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு தென்மராட் சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (5-29)

# வெட்டப்பட்டு, குத்தப்பட்டு, கடத்தப்பட்டு, பிணமாகிக்கொண்டிருக்கும்

# ஈழத்தமிழர்களுக்காக உலகத் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும்

## முதல்வர் கருணாநிதி வேண்டுகோள்

(கொழும்பு)

ஈழத்தமிழர்களுக்கு உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் ஒற்றுமையாக குரல் கொடுக்க வேண் டும் என்று. தமிழ் நாடு முதலமைச்சர் கலை ஞர் மு.கருணா நிதி வேண்டுகோள்விடுத்துள்ளார்



தமிழக ஆயர்கள் பேரவையின் ஊடகக் குழுவான, சாந்தோம் கலைத்தொடர்பு நிறுவனம்,முதலமைச்சர் கருணாநிதிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை நேற்று முன்தினம் வழங்கி கௌரவித்தது.

இந்த விருதினையும் ,பதக்கம் மற்றும் பாராட்டு பத்திரத்தையும் பெற்றுக்கொண்ட கருணாநிதி ஆற்றிய ஏற்புரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்றைய் நாள் வாழ்நாள் சாதனையாளர் விருது எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த சாந்தோம் கலை விழா மன் றம் என்னைப் பெருமைப்படுத்தி ,ஊக்கத்தை, உற்சாகத்தை வழங்கியிருக்கின்றது அதற்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின் றேன்.

என்னை சாதனையாளன் என்று குறிப்பிடுவதைவிட ,நான் பல சோதனைகளை கண்டவன் என்ற முறையில் சோதனையாளன் என்றே குறிப்பிடலாம்.

எனவே ,சாதனையாளர் விருது எனக்கு இப்போது வேண்டாம்,விழாவை ஒத்தி வையுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன். அது மாத்திரம் அல்ல,இப்படிப்பட்ட ஒரு சிறப்பான விழா,தமிழக தலைநகரத்தில் நடை பெறும் போது அதிலே கலந்துகொள்ள எனது மனம் ஒப்பவில்லை.அதற்குக்காரணம் விழா நடக்கின்ற இதே நேரம் நமது தமிழன் வெட்டப்பட்டு,குத்தப்பட்டு ,சுடப்பட்டு இலங்கைத் தீவில் பிணமாக சாய்ந்துகொண்டிருக்கிறான்.

இந்த நேரத்தில் விழாவில் கலந்து கொண்டு விருது பெறுவதை நான் சிறப்பாக கருதவில்லை.

ஆகவே, வேறு ஒரு நாளில் வைத்துக் கொள்ளலாம் என்று எவ்வளவு வேண்டிக் கேட்டுக்கொண்டேன்.

சாதனையாளன் என்பதை நீங்கள் விரும்புகிறவாறு நான் ஏற்றுக்கொண்டாலும் கூட,எனதுசாதனைகளை வரிசைப்படுத்தித் தொடர்ந்தாலும் கூட,எனது சாதனை ,எனது உணர்விற்கேற்ப தமிழர்கள் உண்மையிலேயே வாழ்த்துவதற்கேற்ப அமைந்தது. அந்த சாதனை என்று சொன்னால் ,அது இலங்கைத் தீவில் தமிழன் அமைதியாக வாழ ஒரு வழி கண்டாகிவிட்டது என்ற அந்தச் செய்திதான் நான் முதன்மையானதாகவும் , கடைசியாகவும் செய்கின்ற சாதனை என்பதை உங்களுக்கு நான் இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு இனமே ,பக்கத்தில் இலங்கைத் தீவில் அழிக்கப்படுகிறது. எந்த இனம்? அங்கே ஆண்ட இனம் எந்த இனம் ?இராஜராஜ சோழனால் படையெடுக்கப்பட்டு , வெற்றிக் கொடி பறக்க பரிபாலனம் செய்யப் பட்ட அந்த நாட்டில், இன்று அவனது இனம் அழிந்து கொண்டு இருக்கின்ற அந்தக் காட்சியை காண்கின்றோம்,செய்திகளை கேள்விப்படுகின்றோம்.

அவர்களை காப்பாற்ற முடியாமல் ,காப்பாற்ற நமது கரத்தைநீட்ட முடியாமல்நமதுநிலை பரிதாபத்திற்குரியதாக ஆகி இருக்கி றது.

இந்த நிலை மாறினால் மாறித் தீர வேண்டும்.மாற்றப்பட வேண்டும், மாற்றுவதற்கு எல்லாத்தமிழர்களும் தமிழகத்தில் உள்ள மக்களும் உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களும் ஒற்றுமையாக குரல் கொடுக்க வேண்டும். அணிவகுக்க வேண்டும் .அப்போது தான் நீங்கள் இங்கே வழங்குகின்ற வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு பெருமை, சிறப்பு பொருத்தம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் என்றார் அவர். (5)

# போர்நிறுத்தம் செய்யப்பட்டால் தலைமையேற்று ஜே.வி.பி. யுத்தத்தை நடாத்தும்

## லால்காந்த எம்.பி.சொல்கிறார்

(கொழும்பு)

யுத்தம் தொடர்பான தீர்மானம் மாற்றியமைக்கப்பட்டால் தேசப்பற்றுடைய கட்சி என்ற ரீதியில் ஜே.வி.பி. யுத்த நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்து முன்னெடுத்துச் செல்லும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முயற்சித்தால் அதற்கு ஜே.வி.பி . இடமளிக்காதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் வரையில் ஜே.வி.பி தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் லால்காந் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை வங்கி ஊழியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (5)

> கெடுப்பதும் கெட்டார்க்கு சார்வாய்மற்று ஆங்கே
> எடுப்பதும் எல்லாம் மழை.
>
> – திருவள்ளுவர்

வலம்புரி

## மழை காலத் துன்பம் போக்க புதிய செயற்றிட்டம் தேவை

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு மாரி காலத்திலும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது வழமையான விடயமாகிவிட்டது.

கரையோரப் பகுதிகள் உள்ளிட்ட தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கினால் மக்கள் குடியிருக்க முடியாமல் இடம்பெயர்ந்து செல்வதும், வெள்ளம் வற்றிய பின் மீண்டும் வருவதுமான சம்பவங்கள் தொடர் கதையாக இருப்பது ஏழை மக்களின் வாழ்வில் இது நியதி என்றாகிவிட்டது.

எனவே இது விடயத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள புவியியலாளர்களும், பொறியியலாளர்களும் இணைந்து வருடம் தோறும் ஏற்படும் வெள்ளப்பெருக்கை சமாளிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தற்போது கடும் மழை பெய்து கொண்டிருப்பதனால் வெள்ளம் தேங்கும் இடங்களை இனம் காண்பதும் தேங்குகின்ற வெள்ளம் வழிந்தோடுவதற்கான வழிவகைகளை கண்டறிவதும் சுலபமான விடயமாகும்.

மாரி காலங்களில் யாழ்ப்பாணத்தில் வெள்ளம் தேங்கும் இடங்கள் என்பதற்கப்பால் வீதிகளிலும் மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளிலும் வெள்ளம் தேங்குவது வழமையான விடயமாகக் காணப்படுகிறது.

சில வீதிகள், ஒழுங்கைகளில் வெள்ளம் அதிகமாகத் தேங்கி நிற்பதைக் காணலாம். இங்கு ஒழுங்கைகளில் வெள்ளம் தேங்கி நிற்பதென்பது வெள்ள வடிகாலைக் குறிப்பிடவில்லை என்பது நினைவிற் கொள்ளுதற்குரியது.

இதற்கு மேலாக வீதிகளில் இருக்கக் கூடிய கிடங்குகள் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே யாழ்ப்பாணத்தில் தேங்கி நிற்கக் கூடிய வெள்ளம் தொடர்பில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுவது அல்லது பொருத்தமான புதிய செயற்றிட்டம் தயாரிப்பது அவசியம்.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவி வழங்க முன்வரவேண்டும்.

இவ்விதம் முன்னெடுக்கப்படும் திட்டம் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் தாழ்ந்த இடங்களில் வாழும் வறிய மக்களின் 'மழைகாலத் துன்பத்தை' நீக்குவதாக அமையவேண்டும்.

ஒவ்வொரு மழைகாலத்திலும் மேற்குறிப்பிட்ட இடங்களில் வாழும் மக்கள் கஷ்டங்களை அனுபவிப்பது என்பது நியாயமானதல்ல என்பதால் உரியவர்கள் இது விடயத்தில் அதீத கவனம் செலுத்துவது சாலச் சிறப்புடையது.

# அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென்ற உண்மையை பிள்ளையான் உணர்ந்துள்ளார்

## அரியநேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்துக்கு எந்தவிதமான அதிகாரங்களும் வழங்கப்படவில்லையென்பதை ஒத்துக்கொண்டமைக்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் மற்றும் மாகாணசபை அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

இவர்கள் உண்மையை ஒத்துக்கொண்டமைக்காக நன்றி தெரிவிப்பதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

தேர்தலுக்கு முன்னரே நாங்கள் கூறியிருந்தோம். 13ஆவது திருத்தச்சட்டமூலத்தால் எந்த அதிகாரங்களும் எமக்கு வழங்கப்படாது என்று. ஆனால் அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கை அபிவிருத்தி செய்யமுடியுமென பிள்ளையானும் ஹிஸ்புல்லாவும் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர். தற்பொழுது அவர்கள் உண்மையை உணர்ந்துள்ளனர் என்றார் அரியநேந்திரன்.

கிழக்கு மாகாணசபைக்கு ஒருவரை நியமிக்க கூடத் தனக்கு அதிகாரம் இல்லையென முதலமைச்சர் பிள்ளையானும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மாற்றுவதற்குக் கூட தமக்கு அதிகாரம் இல்லையென மாகாணசபை அமைச்சர் ஹிஸ்புல்லாவும் கூறியிருப்பதாகவும் அரியநேந்திரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இவ்வளவு காலமும் இல்லாமல் இறுதி நேரத்தில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லையென அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் அழுத்தத்திற்கு அமைய இலங்கை அரசாங்கம் எம்மை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு அழைத்தாலும் அதில் கலந்துகொள்ளக்கூடாது என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு. எனினும் இந்த விடயம் தொடர்பாக கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராய்ந்து முடிபொன்றை எடுக்கும் என்றார் அவர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றை முன்வைக்கும் தறுவாயில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இணைந்து தீர்வுத்திட்டத்தில் கையெழுத்துப் போடுவதில் எந்த அர்த்தமும் இல்லை யெனவும், அவ்வாறு செய்தால் யாரோ பெற்ற பிள்ளையை நாம் பதிவுசெய்ததுபோல் அமைந்துவிடும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் மேலும் கூறினார்.

# எம்.பி. பதவியிலிருந்து வீரவன்சவை நீக்குங்கள்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ச உட்பட அக்கட்சியின் உறுப்பினர்கள் 10 பேரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கும்படி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடம் மக்கள் விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறும் வகையில் இவர்கள் செயற்பட்டுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலர்ளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் விமல் வீரவன்ச உள்ளிட்ட பத்து பேரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவிடம் ரில்வின் சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (5)

## எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வினா விடைப் போட்டி

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே பாலியல் நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் பல்வேறு செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களால் பொதுமக்கள் மற்றும் மாணவர் களிற்கு வினாக் கொத்துக்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வினாக்கொத்தினைப்பூர்த்தி செய்து நாளைமறுதினத்திற்கு முன்னதாக சாவகச்சேரி சுகாதார அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதாரப்பரிசோதகர்களிடமோ அல்லது குடும்பநல உத்தி யோக தர்களிடமோ சமர்ப்பிக் குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரியான விடை எழுதியவர்கள் 13பேர் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக சாவகச்சேரி சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (5-29)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் அதிக காலத்தை செலவிடப்போவதில்லை

## பிரதமர் கூறுகிறார்

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு அரசாங்கம் அதிக காலத்தை எடுக்காது. மிகக்குறுகிய காலத்துக்குள் இதற்கு முடிவு கட்டப்படும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிக உயரமான 70 மாடிக் கட்டடத் தொகுதி பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அவ் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் இங்கு மேலும் பேசுகையில் உலகம் இன்று வெற்றிப் பாதையில் முன்னேறிச்சென்று கொண்டிருக்கின்றது. அந்த முன்னேற்றப் பாதையில் நாமும் பயணிக்க வேண்டிய கட்டாயத் தேவையும் எழுந்துள்ளது. ஏனெனில் உலக நாடுகளுடன் நாம் போட்டியிடக்கூடியவர்களாக திகழவேண்டும் அப்போது தான் நாடு அபிவிருத்தியடைய முடியும்.

இன்று நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் முட்டுக் கட்டையாக இருப்பதே பயங்கரவாதம் தான் அந்த பயங்கரவாதம் நாம் முன்னெடுக்கும் மேலும் பல திட்டங்களுக்கும் இடையூறாக இருக்கின்றது. பயங்கரவாதத்தை வைத்துக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்வது என்பது இயலாத காரியம்.

எனவே, பயங்கரவாதம் முற்றாக ஒழித்துக்கட்டப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

அந்த வகையில் பயங்கரவாதம் ஒழித்துக் கட்டப்படுவதற்கு அரசாங்கம் அதிக காலத்தை செலவழிக்கப் போவதில்லை. மிகக் குறுகிய காலத்தில் பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டி இந்நாட்டை விடுவிக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேறகொண்டு வருகின்றது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் அரசின் நட வடிக்கைகள் தொடர்பில் நாட்டு மக்களிடம் பாரிய எதிர்பார்ப்பு இருக்கின்றது.

பொது மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானது என்றார். (5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### எஜமானனைப்போல் வேலை செய்



எஜமானனைப் போல் வேலை செய்ய வேண்டும், அடிமையைப் போல் அல்ல என்பதே இந்த உபதேசத்தின் சுருக்கம். இடைவிடாமல் வேலை செய் ஆனால் அடிமையைப் போல் வேலை செய்யாதே. மனிதர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதை நீ பார்த்ததில் லையா? முற்றிலும் ஓய்ந்திருக்க யாராலும் முடிவதில்லை. நூற்றுக்குத் தொன்னூற்றொன்பது பேர் அடிமைகளைப் போல் வேலை செய்கிறார்கள். பலன் துன்பம் தான். இவையெல்லாம் சுயநலம் சார்ந்த வேலை. சுதந்திரத்தின் மூலமாகச் செயல்புரி, அன்பின் வழியாக வேலை செய்!

'அன்பு' என்ற வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். சுதந்திரம் இல்லாதவரையில் அன்பு தோன்றுவதில்லை. அடிமையிடம் உண்மையான அன்பு இருக்க முடியாது. நீங்கள் ஓர் அடிமையை விலைக்கு வாங்கி, சங்கிலியில் கட்டி, உங்களுக்காக வேலைசெய்யச் சொல்லுங்கள்; அவன் மாடு போல் வேலை செய்வான். ஆனால் அவனிடம் அன்பு இருக்காது. நாமும் உலகப் பொருட்களுக்காக அடிமை போல் வேலை செய்தோமானால், நம்மிடம் அன்பு இருக்க முடியாது. நாம் செய்யும் வேலையும் உண்மையான வேலை யாகாது. உறவினர்களுக்காகவும் நண்பர்களுக்காகவும் செய்யப்படுகின்ற வேலைகளும் சரி, நமக்காகவே செய்யப்படுகின்ற வேலையும் சரி, இது உண்மையே. சுயநலத்துடன் செய்யும் வேலை அடிமை வேலை. இதோ ஒரு சோதனை. அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவரும். அமைதியையும், ஆசிகளையும் விளைவாகக் கொண்டுவராத அன்புச் செயல்கள் எதுவுமே இல்லை.

# பெண்கள் மீதான வன்முறையை இல்லாதொழிக்கும் போது சமூக மேம்பாடு சாத்தியமாகும்

**பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

நாளைய உலகின் வரலாற்றை எழுதத் துடிக்கும் பெண்கள் இன்று பல்வேறு தளத்திலும் கால் பதித்து புகழும் பாராட்டும் பெற்றுவிட்டனர். இன்றைய பெண்கள் ஆளுமைத் திறத்தால் மனவிடுதலை பெற்று போரியல் வரலாறு தொட்டு விண்வெளிச் சாதனை வரை புரிந்து தமது உணர்வுகளை வெளிப் படுத்தி சர்வதேச மட்டத்தில் மதிக்கப்படக் கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளனர். ஆணாதிக்க சமூகத்தின் ஒட்டுமொத்தப் பார்வையிலே பெண்களுக்கான விடுதலையும் சுதந்திரமும் என்றோ வழங்கப்பட்டு விட்டது. பெண்கள் சமூக, அரசியல், அறிவியல், மட்டத்தில் உயர் நிலையை எய்தி விட்டதாக கூறப்பட்டு வரு கிறது.

ஆனாலும் கூட *''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்''* எனப் பாரதி பாடிய வரிகளின் அர்த்தத்தைப் பெற நம் பெண்கள் இன்றளவும் போராட வேண்டித்தான் இருக்கிறது. சமூக மட்டத்தில் ஒரு பெண் பல பரிமாணங்களை எடுக்கிறாள். அந்த ஒவ்வொரு பாத்திரத்திலும் அவள் இன்னல்களை அனுபவிக்கிறாள். வீட்டிலும், வீட்டிற்கு வெளியேயும் வன்முறைக்கு உட்படுகிறாள். பெண்களின் அந்தஸ்துப் பற்றிய அண்மைக் கால ஆய்வுகள் பெண்கள் ஒடுக்கப்படுதலையும் ஆராய்ச்சிக்குட்பட்ட சமூகங்களில் அவர்கள் அனுபவிக்கும் அடக்கு முறையையும் எடுத்துக் காட்டுகின்றன. காலம் கால மாக திட்டமிட்டு உரு வேற்றப்பட்டு வந்த ஆணாதிக்கக் கருத்துக்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு ஆணுக்கு பெண் கீழ்ப்பட்டவள், அவ்வாறு வாழ்வதே பெண்ணுக்கு பெருமையும் மதிப்பும் எனக் கூறப்பட்டு அடிமைப்படுத்தப் படுகிறாள்.

இன்று சமூகத்தில் பெண்கள் சமூக ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் வன் முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். உடலியல் ரீதியாக மட்டுமன்றி உணர்வு, பொருளாதாரம், அரசியல், சமூக ரீதியில் ஏற்படுத்தப்படும் பாரபட்சம், அவமானம், புறக்கணிப்பு, என அனைத்து வடிவிலும் வன்முறை புரியப்படுகிறது. உலக சனத்தொகையில் பெண்கள் அதிகரித்த வீதத்தில் காணப்படுகின்றனர்.

இருப்பினும், உரிமைகள் மறுக்கப்பட்டு கட்டுப்பாடுகளுக்கும் ஒடுக்கு முறைக்கும் உட்படுகின்றனர். பிறக்கும் போது சுதந்திரமாகப் பிறக்கும் பெண் சமூகத்தால் திணிக்கப்படும் வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நசுக்கப்படுகிறாள். ஆண் தலைவன் - வீரமுடையவன், பெண் மென்மையானவள் - அடக்கமானவள் என்கின்ற வரட்டு வேதாந்தங்களுக்கு உட்பட்டு, பெண்கள் ஆசை களைப் பூட்டி வைத்து வளர்க்கப்படுகின்றனர்.

இந்நிலைமை ஆணாதிக்கம் மேலோங்க காரணமானதுடன் ஆண்களை எவ் வகையிலும் மிஞ்சி விடக்கூடாதென்கின்ற பாரபட்சத்திற்கு இட்டுச் செல்கிறது. இத்தகைய பால் ரீதியான வேறுபாடு சமூகத்தளத்தில் பெண்ணினது ஆளுமையையும், தன்னம் பிக்கையையும் சிதைத்து போகப் பொருளாக மாற்றியுள்ளது.

இன்றுவரை சமூகத்தால் வீட்டிலிருக்கும் பெண்ணின் உழைப்பு மதிக்கப்படாத தன்மை காணப்படுகிறது. ஓர் ஆணின் பார்வையிலே வீட்டில் பெண் செய்யும் வேலை அளவிடப் படுவதில்லை. ஒரு பெண் வீட்டில் கணவன், பிள்ளைகளுக்காக ஒரு நாளுக்கு செய்யும் வேலையின் விலை தான் என்ன?

அதேநேரம் வேலைக்கு போகும் பெண்ணை எடுத்துக் கொண்டால் அவள் இயந்திரம் போல் இயங்கவேண்டிய நிலை. இங்கு ''இரட்டைச் சுமை'' சுமத்தப்படுகிறது. பெண் என்ற காரணத்தால் தனக்கு இழைக் கப்படும் கொடுமைகள். சுரண்டல் அடக்கு முறையை அனுசரித்து போக வேண்டிய நிலை. ஆணுக்கு நிகராக பெண்ணிடம் தகுதியும் அனுபவமும் இருந்தும் கூட பாரபட்சம் காட்டப்படுதல் வருந் தத்தக்க விடயம்.

பொதுவாக ஒரு பெண்ணைப் பலவீனப் படுத்தும் ஆயுதமாக பாலியல் சம்பந்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை கையாண்டு அவளை நிலைகுலைய வைப்பது காலம் காலமாக சமூகத்தால் செய்யப்பட்டு வரும் தந்தி ரோபாயம். உலக சுகாதார நிறுவனத்தின் 2005ஆம் ஆண்டு அறிக்கையின் படி உலகில் ஆறு பெண்களில் ஒரு பெண் குடும்ப வன்முறை காரணமாக அவஸ்தைப் படுகிறாள்.

18 வினாடிக்கு ஒரு தடவை உலகின் எங்கோ ஒரு மூலையில் ஒரு பெண் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறாள். அதிலும் தென்னாசியப் பெண்களே கூடுதலாகப் பாதிக் கப்படுகின்றனர்.

இலங்கையில் மட்டும் 60% மான பெண்கள் குடும்ப வன்முறைக்கு உட் படுத்தப்படுகின்றனர். வீட்டில் பெண்களுக் கெதிரான வன்முறைக்கான சான்றுகள் இருப்பினும் 1993 இல் நடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை உலக மாநாட்டில் தான் மனித உரிமை மீறலாக அறிவிக்கப்பட்டது. வன் முறையற்ற வாழ்வை அனுபவிக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணினதும் உரிமையாக இருக்கும் போது நம் பெண்கள் ஏன் அல்லற்பட வேண்டும்.

சமூக ஒழுங்கையும் தனித்துவத்தையும் பேணவும் குடும்ப அமைப்பை சீர்குலையாமல் பாதுகாப்பதற்கும் சில சட்டதிட்டங்களும் விதிமுறைகளும் அவசியமானவை தான். ஆனாலும் அவை ஆணை ஒரு கண்ணோட் டத்திலும் பெண்ணை ஒரு கண்ணோட்டத்தி லும் அணுகும் போது தான் வன்முறை பிறக்கிறது. சமூக மேம்பாட்டிற்கு அவசியமெனக் கூறப்படும் சட்ட திட்டங்கள் பெண்களுக்கு மட்டும் உரித் தானவை என்ற கருத்திற்கு அப் பாற்பட்டு பெண்கள் மீது அவை தொடுக்கும் அதே அளவு அழுத் தம் ஆண்கள் மீதும் பிரயோகிக்கப்பட வேண் டும்.

இதன் மூலம் சமுதாய சமநிலை தோன்றும். ஆண் பெண் இடையே சமநிலை நில வும் போது ஆரோக்கியமான சமுதாயம் உரு வாக முடியும்.

பெண்கள் பாதிக்கப்படும் பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டாலும் அவை வெளிக் கொணரப்படுவதில்லை. எனவே இன்று அதிகரித்து வரும் பாலியல் மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறைகள் வீட்டு வன்முறைகள் போன்றவற்றை ஒழிக்க திட்டங்களை வகுக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. சமூக்த் தளத்தில் பாரபட்சம் உள் ளது என்பதை அங்கீகரிப்பது மட்டும் போது மானது அல்ல. அதை முடிவுக்கு கொண்டு வரவேண்டியது அவசியமானது.

**சு.தமனிகை**
**சமூகவியல்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

செயலின் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும். குடும்பவன்முறையை இல்லாதொழிக்கும் பொறுப்பை சமுதாயம் ஏற்க வேண்டும். வன்முறை சமுதாயத்தில் இருந்து வன்முறையற்ற சமுதாயம் நோக்கி வெளிவர வேண்டும். கௌரவத்தினடியான உறவுகளைக் கட்டியெழுப்ப ஒவ்வொருவரும் முன் வரவேண்டும்.

இவ்வாறான கட்டமைப்புகளுக்கு வெளி யே வந்து பெண்கள் தமது பிரச்சினைகளை வெளிக் கொணர முன்வரவேண்டும். பல பெண்களுக்கு தம் மீது வன்முறை புரியப் படும் போது தம்மைக் காத்துக் கொள்வதற்கான சட்ட பாதுகாப்புப் பற்றிய அறிவற்ற தன்மை காணப் படுகிறது. இது தொடர்பாகக் கரிசனை கொள்ளும் நிறுவமைப்புக்கள் கவனம் செலுத்தி பெண்களுக்கு சட்ட அறிவூட்ட முன் வரவேண்டும்.

ஒடுக்கப்பட்ட சமுதாயமானது தன்னை ஒடுக்குபவர்களில் இருந்து மீட்சி பெற்று விடுதலை காண வேண்டுமென்றால் அங்கெல்லாம் புரட்சி மிக்க சிந்தனைகள் மலர்ச்சி பெற வேண்டும் என்பது கடந்த கால உலகளாவிய வரலாறுகள் எமக்கு கற்றுத் தந்த பாடம். பெண் உரிமைகளை நிலை நாட்டுவதற்கான புரட்சி, பெண் பற்றிய கண்ணோட்டத்தில் புரட்சி, ஆளுமை விருத்திக்கான புரட்சி, எதிர்கால சந்ததியாவது பால்நிலை சமத் துவத்தை அனுப



விப்பதற்கான புரட்சி, சமத்துவம், சுதந்திரம் என்பன ஆரோக்கிய சமுதாயம் உருவாக அவசியம் என்பதை நிலைநாட் டுவதற்கான புரட்சி, எனப் பல தளத்திலும் புரட்சி செய்வதனூடாக பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் பாரபட்சத்தையும் இல் லாதொழித்து ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்க முடி யும்.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 25ஆம் திகதி பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப் பதற்கான சர்வதேச தினமாகக் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் பெண்கள் தொடர்பான விழிப்பு நிலையை ஏற்படுத்தி ஒவ்வொருவரும் வன்முறைக்கு எதிராக எழுச்சி கொள்ளும் போது மலர்ச்சி மிக்க சமுதாயம் உருவாகி சமூக மேம்பாடும் முன்னேற்றமும் சாத்தியமாகும். இது ஓர் வன்முறையற்ற சமுகத் திற்கான நிதர்சனமாக அமையும்.

# இதய நோய்க்கான நவீன சிகிச்சைகள்



Dr.S.அரவிந்த் குமார் M.D., NDB(Cardiology)
இதயநோய் அறுவைச்சிகிச்சை நிபுணர்

இன்றைய சுற்றுப்புறசூழல், உணவு பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் இதய நோய் முதியோர்களுக்கு மட்டுமல்லாது, எல்லா வயதினரையும் பாதிக்கிறது. இதய நோய்களைப் பற்றிய விழிப்புணர்ச்சி அனைவருக்கும் இருக்குமேயானால், இதய நோய்களுக்கான சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு உதவியாக இருக்கும். திருச்சியில் உள்ள கே. எம். சி. மருத்துவ மனையில் இதய நோய் சிகிச்சை நிபுணரான டாக்டர். எஸ். அரவிந்தகுமார், இதய நோய்களுக்கு அளிக்கப்பட்டு வரும் நவீன சிகிச்சைகளைப் பற்றி அளித்த செவ்வி.

### மாரடைப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

இருதயத்தின் இரத்த நாளங்களை தாக்கும் மாரடைப்பு, திடிரென்று தோன்றுவது அல்ல. இந்நோய் சுமார் இருபதாண்டு காலத்திற்கு மேலாக எவ்வித அறிகுறியும் இல்லாமல் வளரும்நோய். சிலரை இந் நோய், அதிக இரத்த அழுத்தம், புகை பிடித்தல் போன்றவையினால் இரத்த நாளத்தின் உட்புறசுவர் பாதிக்கப்படும் போது இந்நோய் ஆரம்பமாகிறது. உட்புறசுவர் பாதிக்கப்பட்ட பின் மிருதுவான பகுதி கரடுமுரடாகிறது. அப்பகுதியின் மீது இரத்தத்தில் மிதக்கும் கொழுப்பு சத்துக்கள் படிந்து கொண்டே வந்து இரத்த ஓட்டத்திற்கான பாதையை குறுகலாக்கி, வழக்கமான இரத்த ஓட்டத்தை தடை செய்கின்றது. இதற்கு மேல் நாளத்தில் ஒரு விறைப்போ (Spasm) அல்லது பாதிக்கப்பட்ட இடத்தில் உறை கட்டி படுதலோ, (Clot Thrombus) ஏற்பட்டால் இரத்த ஓட்டம் முழு வதுமாக தடைபட நேரிடும். இவ்விறைப்பு ஓய்வாக இருக்கும் போது கூட இது ஏற்படலாம். இவ்வித அடைப்பு அதிகமாகும்போது. மார்பில் ஒரு இறுக்கமோ(Angina) அல்லது மாரடைப்போ (Heart Attack) ஏற்படுகின்றது.

### மாரடைப்பு வந்தவர்களுக்கு என்ன மாதிரியான சிகிச்சை முறை சிறந்தது?

மாரடைப்பு வந்தவர்களுக்கு இருதயத்தில் உள்ள தசைகளின் பாதிப்பைப் பொறுத்தும், மீண்டும் நெஞ்சுவலி வருவதை பொறுத்தும், ஒருவரது வயதினைப் பொறுத்தும் மருத்துவ சிகிச்சை முறை மாறுபடும். அதிக தீவிரமாக உள்ளவர்களுக்கு அவர் மருத்துவ மனை விட்டு போகும் முன்பே அவருக்கு ஏஞ்சியோகிராம் செய்து, அதில் அடைப்பு உண்டா என்று கண்டறிந்து சிகிச்சை செய்கிறோம். மற்றவர்களுக்கு சுமாராக ஒரு மாதம் கழித்து, அவர்களுக்கு (Treadmill Exercisc) என்று சொல்லப்படும் பரிசோதனை செய்து பார்க்கப்படும். அதில் மாற்றங்கள் இருந்தால் ஏஞ்சியோகிராம் செய்யப்படும்.

இவ்வாறு நாம் ஏஞ்சியோகிராம் செய்யும் பொழுது இரத்தக் குழாய்களில் எத்தனை அடைப்பு உண்டு. எந்த இடத்தில் உண்டு என்று கண்டறியப்பட்ட பின்னரே இதனைப் பொறுத்து ஒருவருக்கு ஏஞ்சியோபிளாஸ்டி (Angioptasty) என்ற முறையில் ஸ்டென்டிங் (Stending) அல்லது பைப்பாஸ் ஆபரேஷன்(CABG)செய்யப்படும். இதில் ஒரு சிகிச்சை முறையும். மற்ற சிகிச்சை முறையும், ஒன்றைவிட மற்றது சிறந் தது என்று கிடையாது. ஒவ்வொருவருடைய நோயின்தன்மையை அனுசரித்தே முடிவு செய்யப்படும்.

### ஏஞ்சியோபிளாஸ்டி என்றால் என்ன?

ஏஞ்சியோபிளாஸ்டி (Angioptasty) என்றால் நாம் தொடையிலிருந்தோ, கைவழியிலோ, கத்திட்டர் (Catheter) மூலம் இருதயத்தில் உள்ள இரத்தக் குழாய் வழியாக (Dye) ஒருவித மருந்து செலுத்தப்படும் பொழுது இரத்தக் குழாயில் உள்ள அடைப்பு தெளிவாக தெரியும். அதுபோல் தெரியும் அடைப்பை ஒரு சிறிய கம்பிபோல் ஒரு சாதனத்தை வைத்து அடைப்பை கடந்து, பலூன் வைத்து அடைப்பு களையப்படும். அவ்வாறு எடுக்கப்பட்ட அடைப்பு மீண்டும் வராது இருக்க அந்த இடத்தில் ஸ்டெண்ட் (Stent) என்று கம்பி போல் உள்ள பொருள் பொருத்தப்படும். அது பொருத்தப்பட்ட இடத்தில் இருந்து மாறாது இரத்த குழாயில் அப்படியே இருக்கும். இம் முறையை நாங்கள் (Angioptasty) என்று கூறுகிறோம்.

### மாரடைப்பு வருவதற்கான முக்கிய காரணங்கள் என்ன?

தவிர்க்கக்கூடிய காரணங்கள் , புகைப்பிடித்தல், உயர்ந்த அளவு இரத்த கொழுப்பு, மன உளைச்சல், சர்க்கரை வியாதி, பருமனான உடல்வாகு, குணாதிசயம், உட்கார்ந்த இடத்திலேயே வேலை செய்தல்.

**தவிர்க்க இயலாத காரணங்கள் :-** முதுமை பாரம்பரியம் இவற்றினால் மாரடைப்பு ஏற்படக்கூடும். கொலஸ்ட்ராலினால் இருதய வியாதி எவ்வாறு வருகிறது?

கொலஸ்ட்ரால் சில உணவு வகைகளில் உள்ள ஒரு வித கொழுப்பு சத்தாகும். ஈரலும் கொழுப்புச்சத்தை உற்பத்தி செய்கின்றது. இவற்றை இருவகை கொழுப்பு புரதங்கள் இரத்தத்திற்கு எடுத்துச் செல்கின்றன. குறைந்த அழுத்தம் உள்ள கொழுப்பு புரதம் (LDL) இரத்தக் குழாயின் அடைப்புகளை தோற்றுவிக்கின்றன. எனவே இது தீமை பயக்கும் கொலஸ்ட்ரால்(Bad Cholesterot) என்றும் அதிக அழுத்த கொழுப்பு புரதங்கள் (HDL) இரத்தத்தில் உள்ள கொலஸ்ட் ராலை நீக்குகின்றன. எனவே இவை நன்மை பயக்கும் கொலஸ்ட்ரால். அடைப்பை உண்டாக்கி இரத்த ஓட்டத்தை தடைபடுத்துகிறது. இது முக்கியமாக அதிக கொழுப்பு நிறைந்த மாமிசங்கள் (மாட்டு இறைச்சி, பன்றி இறைச்சி) முட்டையின் மஞ்சள் கரு, வெண்ணெய், நெய், பாலேடு, வனஸ்பதி, தேங்காய் எண்ணெய் போன்ற சில தாவர எண்ணெய்கள் முதலியவற்றில் ஏற்படுகின்றது.

### அதிக இரத்த அழுத்தம் உண்டாகக் காரணங்கள் யாவை?

பாரம்பரியம், வயது, கூடுதல் எடை, மிகுந்த உப்புச்சத்து உள்ள உணவுப் பழக்கம், மது, மன உளைச்சல், சிறுநீரகப் பாதிப்பு, சிறுநீரக கற்கள், சில நாளமில்லா சுரப்பிகள் அதிகம் சுரப்பதனாலும், இரத்தக் கொதிப்பு வரலாம். ஆனால் இரத்த கொதிப்பு வந்தவர்கள் கணக்கை பார்த்தால் 99% காரணமில்லாமல் தான் வருகிறது.

(தொடரும்)

ரசிகர்களை இருக்கை நுனிக்கே கொண்டு சென்ற 3ஆவது ஒருநாள் போட்டியில்

# இறுதிப் பந்துவரை போராடி சிம்பாவே தோல்வி

# இலங்கை அணி தொடரை தனதாக்கியது




(ஹராரே)

மூன்றாவது ஒரு நாள் போட்டியில் சிம்பாவே அணி இறுதிவரை போராடி 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என்ற கணக்கில் இலங்கை அணி தனதாக்கியது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடு கின்றது. இதில் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந் நிலையில் தீர்க்கமான மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணித்தலைவர் உற்ஷயா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

எனினும் மழை காரணமாக ஆட்டம் ஆரம்பிப்பது தாமதமானது. மூன்று மணி நேரத்தின் பின்னர் ஆட்டம் ஆரம்பித்த போது இரு அணிகளுக்கும் தலா 28 ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடத்த நடுவர் தீர்மானித்தார்.


இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சங்கக்காரவின் அரைச் சதத்தின் உதவியுடன் 28 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 171 ஓட்டங்களை எடுத்தது. இதில் சங்கக்கார 52 ஓட்டங்களையும் தரங்க 29, கபுகெதர 28 மற்றும் முபாரக் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் முபாரிவா 4விக்கெட்டுக்களையும் சிக்கும்புரா 3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு28 ஓவர்களில் 172ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி மஷஹறட்ஷா, சிர்ண்டாவின் சிறப்பான ஆரம்ப ஆட்டத்தால் இறுதிப்பந்துவரை போராடி 28 ஓவர்கள் நிறைவில்7விக்கெட்டுகளையிழந்து 166 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் மஷஹறட்ஷா 71பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக)77 ஓட்டங்களையும் தைடி 31, சிர்ண்டா 25 மற்றும் மற்கென்ஜேரி 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மெண்டிஸ், துஷார மற்றும் முரளிதரன்ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் குலசேகர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 3:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இப்போட்டியின்திருப்பு முனையை ஏற்படுத்திய மஷஹறட்ஷா ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (5)




## பொன்டிங்கிற்கு அபராதம்

(பிரிஸ்பேண்)

தாமதமாக ஓவர்களை வீசியதற்காக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பென்டிங்கிற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா–நியூசிலாந்து இடையிலான முதல் டெஸ்ட் பிரிஸ்பேனில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியா 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

எனினும் தாமதமாக ஓவர்களை வீசியதற்காக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் மற்றும் அந்த அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அணித்தலைவர் ரிக்கி பொன்டிங்கின் சம்பளத்தில் 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தியாவுக்கு எதிரான 4–வது டெஸ்டின் போது பொன்டிங்கிற்கு இதே காரணத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

## சச்சினைக் கண்டு பயந்ததில்லை ஷேன் வோர்ன் திடீர் 'பல்டி'

(லண்டன்)


'சச்சின் ஆட்டத்தை பார்த்து பயந்ததில்லை. அவர் கனவில் வந்து தொல்லை தருகிறார் என சாதாரணமாக சொன்னதை ஊடகம் பெரிதாக்கி விட்டது' என 'பல்டி' அடித்துள்ளார் அவுஸ்திரேலிய சுழல்மன்னன் ஷேன்வோர்ன்.

கடந்த 1998இல் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்தார் வோர்ன். அப்போது இவரது பந்துவீச்சை அடித்து நொருக்கினார் சச்சின். இதையடுத்து கனவிலும் வந்து தனது பந்தை சச்சின் சிக்சருக்கு அனுப்புவதாக தெரிவித்தார். இந்நிலையில் புதிதாக எழுதியுள்ள 'ஷேன் வார்ன் செஞ்சுரி' என்ற புத்தகத்தில் சச்சினை கண்டு ஒரு போதும் பயந்தது இல்லை என வோர்ன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் சச்சினின் துடுப்பாட்டம் எப்போதும் என்னை பயமுறுத்தியது கிடையாது 1998இல் இந்திய தொடரின் போது இன்று இரவு எனக்கு பயங்கர கனவு வரப்போகிறது என சாதாரணமாக கூறியதை ஊடகங்கள் பெரிய விஷயமாக்கி விட்டது. நான் யாருக்கும் பயந்தது கிடையாது. இதனால் என்னை கர்வம் கொண்டவன் என எண்ணிவிட வேண்டாம்.

என் திறமையில் நம்பிக்கை வைத்துள்ளேன் அவ்வளவுதான். திறமையை நிரூபித்துள்ளேன். சச்சின், லாரா போன்ற துடுப்பாட்ட வீரர்களை எதிர் கொள்வது கடினம் தான். அவர்கள் தங்களது வேலையை சிறப்பாக செய்யக் கூடியவர்கள்.

ஒரு சமயம் அவர்கள் எனது பந்தை மைதானத்திற்கு வெளியே சிக் ஸருக்கு அனுப்புவார்கள். அடுத்த முறை அவர்களை ஆட்டமிழப்பு செய்து எனது திற மையையும் நிரூபிப்பேன்.



**புள்ளிவிபரம் முக்கியமல்ல**

நான் புள்ளி விபரங்களை அதிகம் பார்ப்பது கிடையாது. இது வீரர்களை தவறான திசையில் அழைத்துச்சென்றுவிடும். போட்டி வெற்றியாளர்கள் அதிக சராசரி கொண்டவர்களாக இருக்க முடியாது. இதனால் ஸ்டீவ் வோவை விட அவரது சகோதரர் மார்க் வோ சிறந்த போட்டி வெற்றியாளர் என சொல்லலாம். அவர்கள் இருவரும் வேறுவேறு இடங்களில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்றால் மார்க் வோ விளையாடும் போட்டியை காண்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பேன் என்று வோர்ன் தெரிவித்தார்.

**சம்பளத்தைக் கூட்டுங்கள்**

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் இம்முறை அதிக சம்பளம் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என்கிறார் வோர்ன். இவர் கூறுகையில் ஐ.பி.எல் தொடரின். முதல் தொடர் அருமை யாக இருந் தது. இதில் அணித்தலைவராக செயல்பட்டு, ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு கோப்பை வென்று தந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தற்போது ஐ.பி.எல். அமைப்புக்கு அதிக லாபம் கிடைத்துள்ளது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வளர்ச்சியில் எனக்கு அதிக பங்கு இருக்கிறது. கடந்த முறை என்னை மிகக்குறைந்த விலைக்கு வாங்கி விட்டனர். இம்முறை அதிக சம்பளம் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

ஐ.சி.எல். 'உலக தொடர்'

## குலூஸ்னர் சகலதுறையில் அசத்தல்; உலக லெவின் அணி வெற்றி

(அகமதாபாத்)

பங்களாதேஷ் லெவின் அணியை 12 ஓட்டங்களால் வீழ்த்தியது உலக லெவின் அணி. இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக கபில்தேவால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் கிரிக்கெட் லீக் அமைப்பின் உலகத் தொடர் இருபது–20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவது போட்டியில் ஹரிஸ் தலைமையிலான உலக லெவின் அணியும் ஹபிபுல் பஷார் தலைமையிலான பங்களாதேஷ் லெவின் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்று பங்களாதேஷ் லெவின் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய உலக லெவின் அணி குலூஸ்னரின் அதிரடியான ஆட்டத்தின்மூலம் நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது. இதில் குலூஸ்னர் ஆட்டமிழக் காமல் 49 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 63 ஓட்டங்களையும் போஜே 34, குட்வின் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முகமெட் ரபீக் 3 விக்கெட்டுக்களையும் ஹீசைன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 168 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் லெவின் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் றபீஸ் 33, அகமட் 29, ஹீசைன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையுமெடுத்தனர்.

பந்துவீச்சில் குலூஸ்னர் 3 விக்கெட்டுக்களையும் போஜே, ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் கில்லெஸ்பி, அடம்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் முதல் சுற்று ஆட்டத்தில் உலக லெவின் அணி 2 புள்ளிகளை பெற்றது.

இப்போட்டியில் சகல துறையிலும் ஜொலித்த லாண்ட் குலூஸ்னர் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# வைத்தியர்களுக்கு 50 இலட்சம் ரூபா காப்பீடு வழங்கக் கோருகிறது வைத்தியர் சங்கம்

(கொழும்பு)

பாதுகாப்பு அற்ற பிரதேசங்களில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு அரசாங்கத்தினால் 50 இலட்சம் ரூபா காப்பீடு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென அகில இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி கிசாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வைத்தியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. எனவே அரசாங்கத்தின் செலவில் பாதுகாப்பற்ற பிரதேசங்களில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு காப்பீடு வழங்கப்படவேண்டும் என அகில இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நேற்று தெரிவித்தார்.

அத்துடன் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஏற்பட்டிருக்கும் கால தாமதம் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தாம் பணியாற்றும்போது பெரும்பாலான தருணங்களில் துப்பாக்கி முனையிலேயே பணியாற்ற வேண்டியிருப்பதாக அங்கிருந்து வெளியேறி கொழும்பில் தங்கியிருக்கும் அரசாங்க மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனது பெயரை வெளியிடாது, பி.பி.சியின் சிங்கள சேவைக்கு செவ்வி ஒன்றை வழங்கிய அந்த மருத்துவர் ஆயுதக் குழுக்கள் துப்பாக்கி முனையில் தம்மை மிரட்டி சிகிச்சைகளைப் பெறும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அப்படியான ஆயுதக் குழுக்கள் யாரென்று அரசாங்கப் படையினருக்குத் தெரியும் என்றும் ஆனாலும் அந்த ஆயுதக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் காரணமாக அவர்களை அரச படையினரால் எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் கூறியுள்ளார். (ச-3,5)

## மூன்று மணி...

அறிவித்துள்ளது.

திருத்த வேலைகள் முடிபடைந்தால் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்றுக்காலை முதல் மாலைவரை மின்சாரம் அடிக்கடி தடைப்பட்ட வண்ணம் இருந்தது. தொடர்ந்து மூன்று நாட்களாக கடும் மழை பெய்துவரும் நிலையில் மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. (ச)

## 00 லொறி...

வவுனியாவில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இந்த அத்தியாவசியப் பொருட்கள் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக நேற்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதற்காக கடந்த 3 மாத காலத்தில் அரசாங்கம் 300 லொறிகளில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. (எ-5)

# கொழும்பில் நேற்று 5 தமிழ் இளைஞர் கைது

கொழும்பு நகரில் உள்ள பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை பகுதிகளில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது ஐந்து தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலின் போது நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

காலி வீதி, கடற்கரை வீதி,உட்புற வீதிகள் ஆகியவற்றால் சென்ற.வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. இந்த வீதிகளில் சென்ற தமிழர்கள் வழி மறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சோதனை நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஈழத் தமிழர்களின்...

அவர்களது துயரங்களுக்கு முடிவு கட்டவும் உடனே நடவடிக்கை எடுக்கு மாறு மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தவே இந்தக் கூட்டம் நடக்கிறது.

அங்கு தினந்தோறும் ஏராளமான தமிழர்கள் உயிர் பலி ஆவது குறித்தும் அவர்களது உடைமைகள் அழிக்கப்படுவது குறித்தும் தினந்தோறும் கொடுமையான செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

இந்த விடயம் குறித்து பேசி அடுத்த கட்டமாக மத்திய அரசிடம் என்ன கோரிக்கை வைக்கலாம் என்பதை முடிவு செய்யவே கூட்டத்தைக் கூட்டியுள்ளோம்.

சட்டமன்ற கட்சித் தலைவர்கள் தவிர, கட்சிகளின் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள், மாநிலச் செயலாளர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்கலாம்.

இதன் மூலம் ராமதாஸ்.வைகோ போன்றவர்களும் கூட்டத்தில் பங்கேற்கலாம் என்றார் கருணாநிதி. (ச-5)

## நாடாளுமன்றைக்...

கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசின் பக்கம் தாவிய 17 உறுப்பினர்களும் தற்போது நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டாம் என மகிந்தவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆனால், தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பாக முடிவு எடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலினை நடத்துமாறும் சோதிடர்கள் மகிந்தவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அவர்கள் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு உகந்த நல்ல நாட்களாக டிசம்பர் 9,13 மற்றும் 23 ஆகிய மூன்று நாட்களை குறித்து கொடுத்துள்ளனர்.

டிசம்பர் 9 நல்ல நாள் என மகிந்த தீர்மானித்துள்ளார். இதனிடையே இந்த வருடத்தின் இறுதியில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அரசின் சில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் சித்திரைப் புதுவருடத்திற்கு முன்னரே தேர்தலை நடத்தும் திட்டம் உள்ளதாக வேறு சிலர் தெரிவித்துள்ளனர் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (ச-5)

## யாழ்ப்பாண...

மழை பெய்தால் யாழ்.குடாநாட்டில் தாழ் நிலப் பிரதேசங்களில் இருக்கும் மக்கள் இடம்பெயரக் கூடிய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச)

## தெல்.வைத்தியசாலை...

பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் ஆராய யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா தலைமையிலான விசேட குழு நியமிக்கப்பட்டது.

இக்குழுவில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.பிராந்திய கடற்படைத் தளபதி ஆகியோர் அடங்குவர்.

இவ்விசேட குழு அண்மையில் கூடி ஆராய்ந்து சிபார்சு செய்யப்பட்டதற்கு அமைவாக வலி வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் விரைவில் 133 குடும்பங்களை மீள் குடியேற்றப்படும் என உயர் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அத்துடன் அம் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளுக்கான தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளையும் மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்வதெனவும் சிபார்சு செய்யப்பட்டு உயர் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையின்போது உயர் நீதிமன்ற அமர்வின் உத்தரவுக்கு அமைய வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 133 குடும்பங்களையும் விரைவில் மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் மீள் குடியேற்றப்படும் பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றி அப்பிரதேசத்தை பாதுகாப்பான பிரதேசமாக மக்களுக்கு வழங்குமாறும் உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.

அத்துடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை மீள பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்காக அப்பகுதியிலுள்ள பாதுகாப்பு மண் அரண்களை பின்னகர்த்துமாறும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரிகளை மீண்டும் பழைய இடத்தில் நடைபெற நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்.கட்டளைத் தளபதி ஜீ.ஏ.சந்திரசிறிக்கு உத்தரவிட்டது. (ச-5)

## முன்னேறும் படையை...

நேற்று முன்தினம் அதிகாலை ஆரம்பமான மோதல் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்கிறது. நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 27 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 70 படையினர் வரையில் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதலில் 120க்கும் மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும் 80 பேர் வரையில் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியை நோக்கிய படை நகர்வில் படையினர் நகரை அண்மித்து விட்டனர் என்றும் இந்த மோதலில் புலிகளுக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் படையினரில் பலர் காணாமல் போயுள்ளனர் எனவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியதாவது, கிளிநொச்சி நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த மண்மேடுகளை மும்முனைகளில் இருந்தும் தகர்த்தவாறு நேற்று அதிகாலை முதல் படையினர் கடும் முன் நகர்வு முயற்சிகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் ஆரம்பித்த இருதரப்பு மோதல்கள் மாலை 6 மணிவரை நீடித்துள்ளன.

அத்துடன் நேற்று அதிகாலையும் அவை தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளன. இதேவேளை கிளிநொச்சி நிவில், யாழ்ப்பாணம் கிளாலி மற்றும் முல்லைத்தீவு ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளிலும் இரு தரப்புக்குமிடையில் நேற்று முன்தினம் முழுவதும் சுமார் 8 மணித்தியாலங்களாக கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மோதல்களையடுத்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன என தெரிவித்தது.

இந்த மோதல்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள விடுதலைப் புலிகள் ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெற்று வரும் இந்தக் கடும் மோதல்களின்போது சுமார் 43 படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் மேலும் 70 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் இறந்த படையினரின் 8 சடலங்களை தாம் கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

அத்துடன் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.15 மணியளவில் உருத்திரபுரம் பகுதியூடாக குஞ்சுப்பரந்தன்நோக்கி மும் முனைகளில் படையினர் முன் நகர்வுகளை மேற்கொண்டதாகவும் இம்மும்முனை முன் நகர்வுகளுக்கு எதிராக பிற்பகல் 2.30 மணிவரை விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தி படையினரின் முன் நகர்வுகளை முறியடித்திருப்பதாகவும் விடுதலை புலிகளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-3,5)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை ஜெகநாதன் (மணியம்)



(ஊழியர் E.S.P&CO, கஜமுகன் ஹாட்வெயார்)

தொல்புரம் மத்தியை பிறப்பிடமாகவும் இல.2 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெகநாதன் (மணியம்) 24.11.2008 (நேற்று) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியரத்தினத்தின் அன்புக் கணவரும்,வரலக்ஸ்மி,கம்சலா,தயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலசிங்கம், ஜெயானந்தன் (ஆனந்தன்), காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2008 (நேற்று) பிற்பகல் 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.2 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரர்கள்;
ஜெயானந்தன் (ஆனந்தன்),
ஜெயபாலசிங்கம்.

(C-1796)

# கண்ணீர் அஞ்சலி



நீராகி வேராகி நின்று
நிழல் பரப்பி முன்னும் -பின்னுமாய்
விறுவிறுப்புடன் பல ஆண்டுகள்
எம் நிறுவனத்தில் பணியாற்றி மணியம் என்ற
பெயரை பதித்தவனே!
தோல்வியே இல்லாத உன் வாழ்வு
சொல்லும் தரமன்று.

24.11.2008 அன்று சிவபதமடைந்த

## அமரர் ஜெகநாதன் (மணியம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு கண்ணீர் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி

E.S.P&CO, கஜமுகன் ஹாட்வெயார்
உரிமையாளரும் குடும்பத்தினரும், சக ஊழியர்களும்

50,52, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1797)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.